31

6 APR 1954

கண்கள்

கதை - முழுவசனம் - பாடல்கள்

2NRm8
N54
77261

கண்கள்

— திரைக்கதை —

— முழு வசனம் —

— பூராப்பாடல்கள் —

விலை 8 அணா

மின்மினி பதிப்பகம்
மதுரை.

நடிகர்கள்

சிவாஜி கணேசன்	... ...	சங்கர்
சகஸ்ரநாமம்	... ...	ஸ்ரீதர்
V. K. ராமசாமி	... ...	முனிசாமி
D. பாலசுப்ரமணியம்	... ...	ஹேமாவின் தந்தை
சந்திரபாபு	... ...	சங்கரின் வக்கீல் நண்பர்கள்
விகடம் கிருஷ்ணமூர்த்தி	...	

நடிகைகள்

பண்டரிபாய்	... ...	சாரதா
மைனாவதி	... ...	ஹேமா
C. T. ராஜகாந்தம்	... ...	அத்தை (எல்லோருக்கும்)

★

கதை—வசனம்

N. V. ராஜாமணி M. A.,

★

ஸ்டூடியோ: ரேவதி

★

டைரக்ஷன்

கிருஷ்ணன் பஞ்சு

கண்கள்

காட்சி 1

(ஸ்ரீதரின் மனைவி கர்ப்பவதியாய் இருக்கிருள். அவளுக்கு வளைகாப்பு இட்டுப் பெண்கள் குதூகல மாகக் கொண்டாடுகிருர்கள். ஸ்ரீதரனின் மனைவி— சாரதாவின் அண்ணன் சங்கரும், ஸ்ரீதரனும் சந்தனம் பூசி மகிழ்கின்றனர். பின்னர் ஸ்ரீதரன் தனிமை யாகத் தன் மனைவியிடம் வந்து)

ஸ்ரீதர்: சாரதா! பெண் ஜன்மமே புண்ணிய ஜன்மம். ஒரு புது உயிரை சிருஷ்டிக்கும் சக்தி உங்களுக்குத்தான் இருக்கிறது. உன் முகம் இப்பொழுது எவ்வளவு பிர காசமாக இருக்கிறது தெரியுமா? ஏன் சாரதா, குழந்தை பிறந்து விட்டால் புருஷன்மேல் இருக்கிற பிரியம் குறைந்து விடுமாமே?

சாரதா: உண்மையில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஸ்ரீதரன்: அது உண்மையாக இருக்குமோ என்று பயமாக இருக்கிறது.

(இந்த சமயத்தில் அத்தை கதவைத் தட்டுகிருள். வெறுப்புடன் ஸ்ரீதரன் கதவைத்திறக்கிருன். உடன் வேலைக்காரன் முனிசாமியும் வருகிருன்)

அத்தை: இப்படி சாப்பிடாமே இருந்தா என்ன செய்ய றது? இட்டிலி சூடா மல்லிகைப்பூ மாதிரி இருக்குது, வந்து சாப்பிடுப்பா!

முனிசாமி: நானும் இவ்வளவு வருஷமா தோட்டத்திலே வேலை செய்யுறேன். மல்லிகைப் பூ சூடா இருக்கும்னு தெரியல்லியே.

அத்தை: வெளியில் எல்லோரும்காத்துக்கிட்டிருக்காங்கோ. முனிசாமி போ உள்ளே! ஏன் சாரதா உனக்குக்கூட வேண்டாமா?

சாரதா: எனக்கு பசியே இல்லே அத்தை!

ஸ்ரீதரன்: அத்தை! உங்களுக்கு ஏன் அவ்வளவு சிரமம்? இன்னும் கொஞ்ச நேரத்தில் நாங்களே வருகிறோம். சாரதா! பரீட்சை முடிந்து பிராக்டீசும் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி.... (சங்கர் கதவைத் தட்டுகிறான். சங்கரைக் கண்டதும்) வா சங்கர்! (சாரதாவிடம்) உன் அண்ணனைப் பார்த்தாயா? உனக்குக் குழந்தை பிறக்கப்போகிறது. உன் அண்ணாவுக்கு இன்னும் கல்யாணமே ஆகலியே, இது நியாயமா?

சாரதா: இது நியாயமே இல்லே. என் அண்ணா மனசுக்குப் பிடித்த பெண் யாரும் கிடைக்கவில்லே......

சங்: சாரதா! இந்த ஒரு விஷயத்தில் மட்டும் பேசக்கூடாது என்று எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறேன். இப்போ நான் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறேன்? (ஸ்ரீதரனைப்பார்த்து) ஏனப்பா! நீ ஒரு மெடிக்கல் காலேஜ் ஸ்டுடென்ட்டாக இருந்தும் இப்படிக் காற்றோட்டமில்லாத இடத்தில் அடைந்திருக்கலாமா?

(ஸ்ரீதரை அழைத்துப் போகிறான்)

சாரதா: நீங்கபோங்க, நான்வேற டிரஸ் பண்ணிக்கொண்டு வருகிறேன்.

காட்சி 2

(ஸ்ரீதரனும் சங்கரும்)

சங்கர்: நாளைக்கு நான் பாம்பே போறேன். ஜாக்கிரதையா இரு.

(இந்தச் சமயத்தில் பக்கத்தில் சங்கரின் சகபாடிகள் ஒருவருக்கொருவர் சிரித்து விளையாடுகின்றனர். அவர்களின் சிரிப்பொலி குழந்தையின் அழுகுரல் போன்று கேட்கின்றது. இதனைக்கேட்ட ஸ்ரீதரன் தன் மனைவிக்குக் குழந்தை பிறந்து விட்டதோ என்று சந்தேகப்படுகிறான். ஸ்ரீதரனின் சந்தேகக் குறியை அறிந்த சங்கர்)

சங்: அதற்குள்ளே குழந்தை பிறந்துவிட்டது என்று நினைக்கிறாயா? சீமந்தமே இப்போதானே நடந்தது. இங்கே வா, குழந்தையைக் காண்பிக்கிறேன்.

(சங்கர் தன் சகபாடிகளின் விளையாட்டைக் காண்பிக்கச்சென்றபோது, அவர்களில் ஒருவர் தாய் மாதிரி நடிக்கும் பாவனையில், "வந்து விட்டீர்களா? கொஞ்சம் கவனித்தால் என்ன? என்ன சிரித்துக்கொண்டிருக்கிறீர்கள்? எப்போதும் இப்படித்தான். இந்தச் சனியனைக் கொஞ்சம் தூக்கிக்கொள்ளுங்கோ. இப்படி இருந்தீங்கன்னு என் உடம்புதான் என்னத்துக்காகும்? உங்க உடம்புதான் என்னத்துக்காகும்? இந்தக் குழந்தை உடம்புதான் என்னத்துக்காகும்?")

(இந்தச் சமயத்தில் சாரதா வருகிறாள்)

ஸ்ரீதர்: உங்க காமிக் ரொம்பப் பிரமாதம். இல்லையா சாரதா?

ஒருவர்: நீங்க உங்க 'பிரதர் இன்லா' வக்கீல் போர்டுக்குப் பக்கத்திலே ஒரு போர்டைப் போட்டிடுங்கோ. வாரா வாரம் உங்கள் வீட்டிலே காமிக் நடக்கட்டும். எனக்கு ரொம்ப சந்தோஷம். நீங்க ரெண்டுபேரும் மாப்பிள்ளை மச்சான் என்ற வித்தியாசம் இல்லாமல் இருக்கீங்க.

சங்கர்: நடக்கும்! வாரம் இரண்டு நாள் டிபன் நடக்கும்.

நண்பர்களில் ஒருவர்: உங்களுக்கு ராமன் என்ற பெயர் பிடிக்குமா? சீதை என்ற பெயர் பிடிக்குமா?

ஸ்ரீதரன்: இரண்டும் பிடித்தம்தான்.

மற்றொரு நண்பர்: சபாஷ்! இன்றைக்குத்தான் உன் மூளை ரொம்ப குயுக்கா வேலை செய்யுது.

சங்கர்: என்னப்பா அது?

ஒருவர்: அவர் மூளை வேலை செய்யுற லயனே வேறே. பிறக்கப்போறது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா என்று கேட்கிறார்.

சங்கர்: எனக்கு மருமகன் பிறக்கப்போகிறான். அவனை வக்கீல் வேலைக்கு படிக்க வைக்கப் போகிறேன்.

நண்பர்களில் ஒருவர்: வக்கீல் வேலைக்குப் படிக்க வைக்கப் போறியா?

சங்கர்: ஆமா, ஆமா.

ஸ்ரீதர்: நான் உன் மருமகனை டாக்டர் வேலைக்குத்தான் படிக்க வைக்கப் போறேன்.

நண்பர்களில் ஒருவர்: பார்ப்போம். ஒரு வீசை சக்கரை; இல்லை, கல்கண்டு. என்ன நான் சொல்றது?

காட்சி 3

(ஆஸ்பத்திரியில் பிரசவத்திற்காக ஸ்ரீதரனின் மனைவி சாரதா சேர்க்கப்பட்டிருக்கிறாள். சாரதாவின் நிலையை அறிய ஸ்ரீதர் அங்கு வந்திருக்கின்றான்)

டாக்டர்: நர்ஸ்! மிஸ்டர் ஸ்ரீதரைக் கூப்பிடு.

நர்ஸ்: (ஸ்ரீதரிடம்) சார்! உங்களை டாக்டர் கூப்பிடுகிறார் வாங்கோ.

டாக்டர்: (ஸ்ரீதரிடம்) என்னால் முடிந்த வரையில் பிரயத்தனம் செய்தேன். இதுவரையிலும் உங்கள் மனைவி பிழைத்ததே பெரிய அதிர்ஷ்டம்.

ஸ்ரீதர்: என்ன ஆச்சு?

டாக்டர்: குழந்தை இறந்து போய் விட்டது. உம்! போங்க. இந்த ரூமில் தான் உங்கள் மனைவி இருக்கிறார்.

காட்சி 4

(ஸ்ரீதர் சாரதாவைப் பார்க்க அவள் இருக்கும் ரூமுக்கு வருகிறான். அங்கே இருந்த நர்ஸ்)

நர்ஸ்: ஏன் சார்! கண்ணிலே ஏதாவது கோளாறு என்று சொன்னுங்களா ?

ஸ்ரீதர்: இல்லையே.

நர்ஸ்: சீக்கிரமாகக் கவனிக்கணும்.

(ஸ்ரீதர் சாரதாவை வீட்டிற்கு அழைத்து வருகிருன்)

காட்சி 5

(சங்கரின் நண்பர்களான வக்கீல்கள்)

ஒருவர்: என்ன சொன்னுலும் இந்த வக்கீல் தொழிலுக்கு ஈடு இணையே கிடையாது.

மற்ருெருவர்: நீ சொல்வது சரிதான். ஆனுல் நமக்குத் தான் அதிர்ஷ்டம் கிடையாது. நீயும் நானும் நடராச னும் ஒரே காலேஜ்லே ஒரே வாத்தியார் கிட்டேதான் படித்தோம். ஆனுலும் நீயும் நானும் அவங்கிட்டே போகவேண்டியிருக்குது. நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்.

ஒருவர்: இவ்வளவு வருஷத்துக்குப்பிறகு ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்துவிட்டாய்! இந்த மாதிரி கலாட்டா செய்து காலத்தை வீணுக்குவதில் பிரயோ ஜனமில்லே.

ஒருவர்: என் மனசிலே ஒரு ஆசைஇருக்குது. அன்றைக்குப் புலபாய் தேசாய் சத்தியத்துக்காக வாதாடினர். அதுபோல ஒரு உயர்ந்த லட்சியத்துக்காக வாதாடப் போறேன். முதல் கேஸ்...3-வது கேஸ் ஆடுகிறேனு ...கட்சி பேசுற நேரத்தில் எங்கிட்டே காலணு இல்லை. கட்சி பேசி ஜெயிச்சதும் கட்சிக்காரர் 50 ஆயிரம் கொடுப்பார். அதை எடுத்து அப்படியே வெளியில் வருவேன். வரும்போதே பிச்சைக்காரன் காலணு என்று கேட்பான். அப்படியே ஐம்பதாயிரத்தையும் பிடி என்று கொடுப்பேன். அப்புறம் அவன் பின் ணலே துரத்திக்கொண்டு ஓடுவேன். (இந்தச் சமயத் தில் தபால்காரன் வந்து)

தபால்காரன்: சார் போஸ்ட். (தபால் வாங்க இரண்டு பேரும் வருகிறார்கள். அவர்களிடம்) ஸ்டாம்பு ஒட்டலே. பேரிங் சார்ஜ் 4 அணு கொடுங்கோ.

ஒருவர்: எங்கிட்டே சில்லரை இல்லே. (பரிதாபமாக மற்றவரின் முகத்தைப் பார்க்கிறான்)

மற்றொருவர்: சில்லரையை நான் தொட்டதே இல்லே. எல்லாம் நம்ம கிட்டே செக் தான்.

ஒருவர்: ஒரு நிமிஷத்துக்கு முன்னே தான், ஐம்பதாயிரத்தை அலட்சியமாப் பேசினே. இப்போ பார் 4 அணு நம் கையிலே இல்லே......சின்னதா இருக்குதேன்னு நாம் அலட்சியம் செய்யக்கூடாது.

மற்றொருதர்: பெரியவன் சின்னவனை அலட்சியம் செய்யணும்.

ஒருவர்: முடியாது.

(இருவரிடமும் பணமில்லாததைக் கண்ட போஸ்ட்மேன்)

போஸ்ட்மேன்: பரவாயில்லீங்க! நாளை நான் வந்து காசை வாங்கிக்கிறேன்.

(என்று சொல்லி தபாலை கொடுத்துவிட்டு போகிறான். ஒருவர் தபாலை உடைத்துப் பார்க்கின்றார்)

மற்: அதுதான் அப்பா இந்த உலகத்தில் நிலையா இருக்கிற நியாயம். அது போகட்டும் விஷயம் என்ன?

ஒரு: வெரி பாட் நியூஸ். ஆமாம்! தங்கைக்குக் குழந்தை பிறக்கப் போகிறது என்று சங்கர் எவ்வளவு ஆவலா இருந்தான். எல்லாம் ஏமாற்றமாகப் போய்விட்டது.

காட்சி 6

(ஸ்ரீதரும் சாரதாவும்)

ஸ்ரீதர்: அழாதே சாரதா! எனக்கு மட்டும் துக்கம் இல்லையா. உனக்குக் கண்வலி இல்லாமலிருந்தால் அழுதாவது

மனசை சமாதானம்செய்து கொள்ளலாம். சாரதா! சிறிது ஆறுதல் செய்துகொள்.

சாரதா: என் கண்ணைக் குழியில் வைக்கும்போது நான் மட்டும் பிழைக்கலாமா?

ஸ்ரீதர்: இப்படியே அழுதுகொண்டிருந்தால் உன் உடம்பு என்னத்துக்காகும்? (அத்தை இந்தச் சமயத்தில்வந்து)

அத்தை: இந்தாம்மா! வெறும் காபி மட்டும் சாப்பிடு.

சாரதா: அத்தை! நான் பாவம் செய்துவிட்டேன்.

அத்தை: சரிதான். அது வரையிலே பெரிய உயிரு நீ பிழைச்சியே. நீங்க ரெண்டு பேரும் சௌக்கியமா இருந்தா குழந்தைகளுக்கா பஞ்சம்?

சாரதா: இனிமே எனக்கு குழந்தைகளே வேண்டாம்.

அத்தை: ஆமா ஆமா! இப்படிச் சொன்னவங்க ரொம்பப் பேர். ஒரு குடும்பம்னு இருந்தா எல்லாம் இருக்காதா? அப்படித்தான் என்ன வயது 50 ஆச்சா? நானும் தான் நாலு, அஞ்சு பெற்றுக் குழியிலே வச்சிட்டேன். அதற்காகச் செத்தா போய்விட்டேன்?

காட்சி 7

(ஸ்ரீதர் சாரதாவுக்கு மருந்து போடுகிறான்)

ஸ்ரீதர்: சாரதா இப்படி வா! இந்த மருந்தை கண்ணுக்குப் போட்டுக்கோ. இந்தப் 'பில்சை' உள்ளுக்குச் சாப்பிடு.

சாரதா: எதுக்கு இது எல்லாம்?

ஸ்ரீதர்: ஒரு பரீட்சை வைத்திருக்கிறார்கள். ஊருக்கு எல்லாம் வைத்தியம் செய்யப்போகிறேன், அதுக்கு முன்னாடி உனக்கு மருந்து போட்டுச் சௌக்கியமாக்கப் போறேன்.

அத்தை: சொந்தக்காரர்களுக்கு மருந்து போட்டால் பலனளிக்காதுன்னு சொல்லுவாங்க.

ஸ்ரீதர்: பலனளிக்காமே என்ன? சொந்தக்காரர்களுக்கு மருந்து கொடுத்தா பணம் வராதுன்னு அப்படிச் சொல்லியிருக்காங்கோ.

அத்தை: என்னமோ அப்பா. அவளுக்கு எல்லாம் நீதான். அவளை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள். நானும் வந்தவேளை சரியா இல்லை, ஊருக்குப் போய்வருகிறேன்.

காட்சி 8

(அத்தை ஊருக்குத் திரும்பிவிடுகிருள். ஊரில் ஹேமாவின் வீட்டில் ஹேமாவும் கமலாவும்)

கமலா: ஹேமா?

ஹேமா: என்ன கமலா?

கமலா: உன்னைப் பார்க்க உங்க அப்பாவும் அத்தையும் வந்திருக்காங்கோ.

ஹேமா: வாங்க அத்தை! ஊருக்குப் போனதும் இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்களே?

அத்தை: இங்கே இருந்து போன நேரம் சரியில்லே.

ஹேமா: அப்பா! இன்றைக்கு நான் புதுசா ஒரு பாட்டு கட்டியிருக்கிறேன்.

அப்பா: நீ பாட்டு கட்டியிருக்கிறியா? அப்போ ஏதாவது குறும்புத்தனமாக இருக்கும்.

(ஹேமா அவசர அவசரமாக ஓடுவதைக் கண்ட அத்தை)

அத்தை: எங்கே ரயிலுக்குப் போறவ மாதிரி ஓடுருளே?

அப்பா: இன்றைக்கு அவ பள்ளிக்கூடத்திலே கலைமகள் விழாவாம். அதனலதான் ஓடுரு. இதையெல்லாம் பார்க்க அவ அம்மா கொடுத்து வைக்கல்லே.

(பாட்டு) கூடு செல்லும்......

காட்சி 9

(சங்கர் பம்பாயிலிருந்து சாரதாவைப் பார்க்க வருகிறுன்)

முனிசாமி: வாங்க எசமான், வாங்க. நம்ம அம்மாவுக்கு குழந்தை பிறந்து......

சங்கர்: எல்லாம் தெரியும். இப்போ சாரதா எப்படி இருக்கிருள்?

முனி: சதா அதை நினேச்சி அழுதுகொண்டிருக்கிருங்கோ எசமான்.

சங்: ஸ்ரீதர் எங்கே?

முனி: உள்ளே இருக்கிருங்கோ.

(இடையில் ஸ்ரீதரைப் பார்க்கிருன்)

ஸ்ரீதர்: ஓ! வா சங்கர்! (நேராகச் சாரதாவைப் பார்க்கச் செல்கிருர்கள்)

சாரதா: அண்ணு!

சங்: அழாதே அம்மா! நடந்ததைப் பற்றி வருத்தப்பட்டு என்னம்மா பிரயோஜனம்?

(ஸ்ரீதர் சாரதாவின் கண்ணுக்கு மருந்து போடுகிருன்)

ஸ்ரீதர்: (சாரதாவை) கண்ணைத் திற......

சங்கர்: என்னப்பா! கண்ணுக்கு மருந்து போர்றே?

ஸ்ரீதர்: ஒன்றுமில்லே. பிரசவத்துக்குப் பிறகு கண்ணில் ஏதோ வலி இருக்கிறதாம்.

சங்: டாக்டர் யார்?

ஸ்ரீதர்: நான் டாக்டர் என்பதை மறந்து விட்டாயா?

சங்கர்: சரிதான்! புஸ்தகத்தைப் பார்த்து ஒவ்வொரு மருந்தா பார்த்துப் பார்த்துப் போர்றியா?

ஸ்ரீதர்: பார்க்காமல் போட அவ்வளவு மேதாவி அல்ல. நீ கூடக் கேசிலே ஜெயிக்கணும்ஞ சட்டப் புஸ்தகத்தைப் பார்த்து எழுதிஞல்தான் முடியும்.

சங்: எனக்குப் பயமாக இருக்கிறது. ஒரு நல்ல டாக்டரைப் பார்த்துக் காண்பிக்கணும். நீ கொடுக்கிற மருந்துகளுக்கு இந்த நோய்தானா என்று தெரிந்து கொள்ளணும்.

ஸ்ரீதர்: கண்ணைப்பார்! எவ்வளவு க்ளியர் கட்டா தெரியுது?

சங்: நீ கொடுக்கிற மருந்து இதுக்குத்தான் என்று எப்படித் தெரியும்?

ஸ்ரீதர்: உன் கிராஸ் எல்லாம் கோர்ட்டில் வைத்துக்கொள். இந்த ஊரிலே இருக்கிற எல்லா டாக்டர்களையும் பார்த்து நல்ல டாக்டர் என்று யாராவது போர்டு போட்டிருந்தால் வந்து சொல். நல்ல டாக்டருக்கு இரண்டு கொம்பா முளைச்சிருக்கும்? அல்லது பிறக்கும்போதே அப்படிப் பிறந்துட்டாங்களா?

சங்: நான் சொல்வதைக்கேள். வேறு டாக்டரைக் கூப்பிட்டு வாப்பா! (சாராதாவிடம்) கடுமையாகப் பேசியதற்கு வருந்துகிறேன் சாரதா.

ஸ்ரீதர்: சாரதா! இவன் மனைவிக்கு ஏதாவது வியாதிவந்து சொத்து விஷயமாக கேஸ் வந்தால் சட்டத்தைப் பற்றி நான் யோசனை கூறினால் அதைக் கேட்பானா?

சங்: நீ இப்பொழுது பரீட்சை பாஸ் பண்ணாமல் மருந்து கொடுக்கிறாய் என்று எழுதிப்போட்டால் நாளைக்கே அரஸ்ட் வாரண்ட் வந்துவிடும்.

ஸ்ரீதர்: (சாரதாவைப் பார்த்து) உன் அண்ணாவை ஜாக்கிரதையாக இருக்கச் சொல். இன்னமும் இவன் ஆதரவிலேயே நீ இருக்கிறதாக நினைச்சிக்கிட்டிருக்கான் போலிருக்கு!

சங்: (சாரதாவைப் பார்த்து) உனக்கு வேறே நாதி இல்லேன்னு நினைச்சிக்கிட்டான் போலிருக்கு!

(கோபமாக ஸ்ரீதரன் வெளியே சென்று விடுகிறான்.
சங்கரும் வெளியே சென்று விடுகிறான்)

காட்சி 10

(வெளியே சென்ற சங்கர் டாக்டரை அழைத்து வருகிறுன்)

சங்: உட்காருங்கோ டாக்டர். சாரதா! சாரதா! இங்கே வா அம்மா!

சாரதா: என்ன அண்ணு?

சங்: இவர் எனக்கு ரொம்ப வேண்டியவர். பெரிய கண் டாக்டர். உன் கண்களை இவரிடம் காட்டு அம்மா.

சாரதா: அவர் வெளியில் போயிருக்கிறுர். அவர் வந்து விடட்டுமே.

சங்: தெரிந்துதான் வந்தேன். பரவாயில்லே சாரதா! ஸ்ரீதர் வர நேரம் ஆகும். இவர் பார்க்கட்டும்.

டாக்: பிளீஸ்! இப்படி உட்காருங்கோ. எவ்வளவு நாளாக இந்த டிரபிள் இருக்குது?

சங்: 15, 20 நாட்களாக இருக்கலாம்.

டாக்: அவ்வளவு நாளாகக் கவனிக்காமல் இருக்கலாமா?

தங்கம்மா: டாக்டர் ஐயா! அம்மா ரொம்ப அவஸ்தைப்பட ருங்க. சீக்கிரம் குணப்படுத்துங்கோ.

டாக்: சங்கர்! கண்ணில் நிறைய 'டான்ஸில்' இருக்குது. கிளீன் செய்யுறதுக்கு முன்ணடி உள்ளுக்குச் சாப்பிட மிக்ஸரும், பில்சும் கொடுத்து அனுப்புகிறேன். முதலில் அதைச் சாப்பிடக் கொடுங்கோ — அப்புறம் பார்க்கலாம்.

சங்: சாரதா! நான் போய் மருந்து வாங்கிக்கொண்டு வருகிறேன் அம்மா!

சாரதா: அண்ணு! நீ இங்கேயே இரு.

சங்: முனிசாமியை அனுப்புகிறேன். மருந்து கொடுத்து விடுங்கோ.

முனிசாமி: சரிதானுங்கோ.

(டாக்டருடன் முனிசாமி மருந்து வாங்கச் சென்றுவிடுகிருன்)

சாரதா: என்ன அண்ணு இதெல்லாம்?

சங்: நல்ல டாக்டரைக் கூப்பிட்டு வந்து கண்ணைக் காட்டச் சொன்னுல்...இப்படி இருந்தா உனக்கு அழகாய் இருக்குதாம்மா?

சாரதா: நம்குடும்பத்தில் இதனுல் ஏதோ பெரிய ஆபத்து தான் வரப் போகுது.

சங்: நீயும் உன்புருஷனும் சந்தோஷமா இருக்கணும் என்ற ஆசை எனக்கு மட்டும் இல்லையா?

சாரதா: எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. என்னுடைய சுகமும் துக்கமும் பரிபூரணமாக என்புருஷனைச் சேர்ந்ததாக இருக்கட்டும். எனக்காகப் பாடுபடும் புருஷனுடைய அன்புதான் என்ன அன்பு! எனக்கு அந்த டாக்டர் வேண்டாம். அந்த டாக்டரைவிட என் புருஷனும் டாக்டர்தான். தீர்மானமாகச் சொல்லிவிட்டேன். அந்தக் கண் டாக்டர் வேண்டாம். அண்ணு! இது என் குடும்ப விஷயம். இதில் நீ தலையிடாதே.

சங்: சாரதா! நீயா இப்படிப் பேசுவது!

சாரதா: ஆமாம்! நானேதான் இப்படிப் பேசுவது.

சங்: உன்னுடன் பிறந்த இரத்த பாசம்தான் சாரதா. என் மனது கேட்கவில்லை. சரியோ, தவருே இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நான் சொல்கிறமாதிரிக் கேட்டுவிடு. இந்த டாக்டர்கொடுத்த மருந்தை மட்டும் உபயோகம் செய் சாரதா. ஸ்ரீதருக்கு இது தெரிய வேண்டாம். உன் சம்மதமில்லாமல் இனி எந்த விஷயத்திலும் நான் தலையிட மாட்டேன் சாரதா! வருகிறேன்.

காட்சி 11

(வேலைக்காரி தங்கம்மாள் சாரதாவிடம்)

தங்: அம்மா! வேறு டாக்டர் வந்தாங்களாமே! என்னம்மா சொன்னுர். சீக்கிரம் நல்லா ஆயிடும்னு சொன்னுரா?

சாரதா: அந்த மருந்தை எல்லாம் கொண்டுபோய்க் கிணற்றில் போடு. அவர் வந்து போன சமாச்சாரம் ஐயாவுக்குத் தெரியவேண்டாம்.

(இந்தச் சமயத்தில் ஸ்ரீதர் அங்கே வருகிறான்)

ஸ்ரீதர்: சாரதா! இப்போ கண் எவ்வளவோ தேவலே. நாளாக ஆக அநேகமா நோய் நீங்கிப்போய்விடும்.

(மருந்துபாட்டிலுடன் நின்றுகொண்டிருந்த தங்கம்மாவைப் பார்த்து)

ஸ்ரீதர்: உன் கையிலே என்ன மருந்து பாட்டில்? (ஸ்ரீதர் குரலைக் கேட்டதும் மருந்து பாட்டிலைக் கீழே நழுவவிட்டு விட்டாள் வேலைக்காரி) என்ன போட்டு உடைக்கிறே?

சாரதா: அது, நீங்கள் வேண்டாம் என்றுசொன்ன பழைய மருந்துதான். நான் கூச்சல் போட்டதில் பதறிப்போய் விட்டிருப்பாள் பாவம்.

ஸ்ரீதர்: சரி சரி! கண்ணாடித்தூள் ஒன்றும் இல்லாமல் எடுத்துவிடு. (சாரதாவிடம்) ஏன் திடீரென்று கூச்சல் போட்டுட்டே?

சாரதா: கண்ணில் நீர் வருவது மாதிரி இருந்தது.

ஸ்ரீதர்: அப்பொழுதே நினைத்தேன். அதற்காகத்தான் நானும் கூலிங்கிளாஸ் வாங்கிட்டு வந்திருக்கிறேன். உட்கார்! கண்ணிலே வெளிச்சம் நேராகப் படுவதால் தான் இப்படி. தூங்குற நேரம் தவிர மற்ற எல்லா நேரங்களிலும் கண்ணிலே கிளாஸ் இருக்க வேண்டும். கண் சரி ஆகிறவரை வீட்டுக்குள்ளேயே இரு. இன்னும் ஒரு வாரத்தில் பூரா வியாதியும் தீர்ந்து விடும். அதுவரை கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். அதற்காக உன்னைக் கவனிக்காமலா இருக்கிறது? நீ கண்டிப்பாக இருவேளையும் காபி பலகாரம்சாப்பிட்டுத் தான் ஆகணும்.

காட்சி 12

(ஸ்ரீதரன் சாரதாவின் கண்களுக்கு மருந்து போடுகிறான்)

சாரதா: வலி பொறுக்க முடியல்லியே! வலி பிராணன் போகிறது.

ஸ்ரீதர்: சாரதா! வலி பொறுக்க முடியவில்லையா? சாரதா! சாரதா! கொஞ்சம்பொறுத்துக்கொள். உங்க அண்ணுவுக்குத் தந்தி கொடுக்கிறேன். அவன் வரட்டும்.

சாரதா: அண்ணு வந்து என்ன செய்யப் போகிருன்? நான் குழந்தை மாதிரி அழுது உங்கள் மனதைக் கஷ்டப் படுத்தி விட்டேன்.

ஸ்ரீதர்: இல்லே. நான் பெரிய தப்பு செய்து விட்டேன்.

சாரதா: நீங்களே இப்படித் தடுமாறிஞல் நான் என்ன செய்வது?

ஸ்ரீதர்: நான் உடனே போய் ஒரு நல்ல கண் டாக்டராகத் தேடிப் பார்த்து வருகிறேன்.

காட்சி 13

(சங்கர் சாரதாவின் வீட்டுக்கு வருகிறுன்)

ஸ்ரீதர்: வா சங்கர்.

சங்: சாரதா எங்கே?

ஸ்ரீதர்: உள்ளே படுத்திருக்கிருள்.

சங்: சாரதா!

சாரதா: அண்ணு!

காட்சி 14

(டாக்டர் ஒருவா வருகிறுர். வந்து சாரதாவை சோதனை செய்து பார்த்துவிட்டு ஸ்ரீதரிடம்)

டாக்டர்: அவர்களை வெளியே அனுப்பிடுங்கோ. உங்களோடு கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது.

ஸ்ரீதர்: சங்கர்! சாரதாவை உள்ளே அழைத்துப்போ!

(சாரதாவும் சங்கரும் வெளியில்செல்கின்றனர். டாக்டர் ஸ்ரீதரிடம் தனிமையாக)

டாக்: வருங்காலத்தில் நல்ல டாக்டராக வரக்கூடியவர் கொஞ்சங்கூடப் பொறுப்பில்லாமல் நடந்திருக்கிறீர்களே!

காட்சி 15

சங்: ஏனம்மா உன் கண் மோசமாகப் போய்விட்டது? டாக்டர் மருந்தை உபயோகிக்க வில்லையா?

சாரதா: இல்லை அண்ணு! இரகசியமாக டாக்டர் மருந்தைத் தான் உபயோகித்தேன். திருட்டுத்தனமாக உபயோகிக்கும் பொழுது ஒரு நாள் தவறுதலாக உள்ளுக்குச் சாப்பிட வேண்டிய மருந்தை வெளியிலும், வெளியில் போட வேண்டிய மருந்தை உள்ளேயும் சாப்பிட்டு விட்டேன்.

சங்: டாக்டரிடம் மருந்து வாங்கிக் கொடுத்ததற்குப் பலன் சாரதா. என்னுடைய முட்டாள் தனம்.

காட்சி 16

சங்கர்; டாக்டர் என்னப்பா சொன்னுர்?

சாரதா: இதோ பாருங்கோ. இப்போ கண் வலி கொஞ்சங் கூட இல்லை.

ஸ்ரீதர்: அவரால் பார்க்க முடியாது. என்னுல் ஒரு பெரிய ஆபத்து.

சாரதா: ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க. டாக்டரிடம் கேட்டிருக்கக் கூடாதா?

ஸ்ரீதர்: இப்பொழுது பார்த்தாரே!

சாரதா: முரட்டுத்தனமாக அவசரப்பட்டு உளறியிருப்பார்.

ஸ்ரீதர்: முரட்டுத்தனமாக அவசரப்பட்டு நான் உன் கண்ணுக்குச் செய்த சிகிச்சையைப்பற்றிச் சொன்னுர்.

சாரதா: நீங்கள் செய்த சிகிச்சைக்கு என்ன குறைவு?

சங்: டாக்டர் என்னதானப்பா சொன்னர்?

சாரதா: உன் கண்களை ஆபரேஷன் செய்ய வேண்டிய நிலைக்கு வந்து விட்டது.

சங்: ஆபரேஷனு......?

சாரதா: ஆபரேஷனு...? ஆபரேஷன்தானே! செய்து விட்டால்போகுது.

ஸ்ரீதர்: உனக்குப் பயமாக இல்லையா சாரதா? சாதாரணமாகச் சொல்லிவிட்டாயே.

சாரதா: இதற்குப் பயப்பட நான் என்ன குழந்தையா?

ஸ்ரீதர்: கண் ஆபரேஷன்என்ருல்பெரியபெரிய ஆண்பிள்ளைகள் கூட கதி கலங்கி விடுவார்களே!

சாரதா: அது ஆச்சரியம் இல்லையே? ஆண் பிள்ளைகள் சூரத்தனம் எல்லாம் அவன் மனைவி முன்தான், வீண் ஜம்பத்தில்கூட எங்களைத் தோற்கடிக்க முடியாது.

ஸ்ரீதர்: சாரதா! ஆபரேஷன் இம்மீடியட்டா செய்தர்கணுமாம்.

சாரதா: அதற்கு ஏன் நீங்கள் வீணுக மனதைக் கஷ்டப் படுத்திக் கொள்கிறீர்கள்?

ஸ்ரீதர்: சங்கர்! சாரதாவின் கண் சரியாகிறவரை என்னை விட்டுப் பிரியவே கூடாது அப்பா! நான் பேசியதை எல்லாம் மறந்துவிடு.

சங்கர்: நீயும் மன்னித்துவிடு.

சாரதா: நீங்கள் இரண்டு பேரும் சமாதானமாகி விட்டீர்கள் இப்பொழுதே என் கண் குணமான மாதிரிதான்.

ஸ்ரீதர்: சாரதா! நாங்கள் போய் டாக்டரைப் பார்த்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம்.

காட்சி 17

சாரதா: (வேலைக்காரியிடம்) ஏனம்மா! அன்றைக்கு மருந்து பாட்டில் உடைந்த விஷயம் அவருக்குத் தெரியாதுல்லே.

வேலை: தெரியாதும்மா! ஆமா, இரண்டு பேரும் சந்தோஷமா போறுங்களே? என்னம்மா சொன்னீங்க!

சாரதா: பொய் சொன்னேன்.

வேலை: பொய் சொன்னதுக்கா இவ்வளவு சந்தோஷப்படுறுங்க, என்னம்மா?

சாரதா: பெண்ணுகப் பிறந்து விட்டால் குழந்தையைச் சமாதானம் செய்ய குழந்தையிடம் பொய் சொல்ல வேண்டியிருக்குது. சமயத்தில் குழந்தையின் தகப்பனரிடத்திலும் பொய் சொல்ல வேண்டியிருக்குது. இதிலிருந்து நமக்கு விடுதலையே இல்லை.

காட்சி 18

(ஆஸ்பத்திரியில் சாரதாவின் கண்கள் ஆபரேஷன் செய்யப்படுகின்றன.)

காட்சி 19

(ஸ்ரீதர் வீடு. வீட்டில் வேலைக்காரன் முனிசாமியும், வேலைக்காரியும்)

முனி: தங்கம்மா! அம்மா போயி ரொம்ப நேரம் ஆயிடுச்சி. ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு தகவலும் காணுமே. சரி நீ வீட்டில் ஜாக்கிரதையாய் இரு. நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்.

தங்: நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். நீ இரு.

முனி: இந்தா! சொன்னு கேட்கமாட்டியா?

தங்: நான் போறேன்.

(இந்தச் சமயத்தில் ஊரிலிருந்து அத்தை வருகிருள்.)

முனி: அத்தை! கொஞ்சம் இரு அத்தை. அம்மாவுக்குப் பத்து நாளா கண்வலி. ஆபரேஷனுக்காக இன்றைக்கு அனுப்பிச்சிருக்காங்க. நாங்க போய்ப் பார்த்துவிட்டு வருகிறோம், வீட்டிலே ஒருவரும் இல்லை, ஜாக்கிரதையா பார்த்துக்கொள்ளுங்கோ.

காட்சி 20

(சாரதாவுக்கு ஆபரேஷன் முடிந்துவிட்டது. ஆபரேஷன் முடிந்ததும்)

டாக்: இது எவ்வளவு தெரியுதா அம்மா?

சாரதா; தெரியலியே...

ஸ்ரீதர்: இப்போ எவ்வளவு சாரதா?

சாரதா: எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே. என் கண்... கண் போய்விட்டது. ஐயோ......இனிமேல் நான் ஒன்றும் பார்க்கமுடியாது. பார்க்க முடியாது பார்க்க முடியாது. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

சங்: சாரதா!

சாரதா: ஐயோ! ஐயோ! இனிமேல் நான் எதையும் பார்க்க முடியாது. என் கண் போய் விட்டதே!...என் கண் போய்விட்டதே...!...

காட்சி 21

(வக்கீல் நண்பர்கள் இருவர். ஒருவர் பேப்பர் படிக்கிறார்—பேப்பரில் 'தொழில் மோசம்' என்ற வாசகத்தைப் படிக்கிறார். இதைக் கேட்ட மற்றொருவர்)

மற்: நீ வேறெ அப்பா. தொழிலே சரியா செய்ததில்லே, அதற்குள் தொழில் மோசமாம்! இப்போ ராமராஜ்யம் வந்தாகி விட்டது. அதாவது பகைவனையும் ஒன்றாக நிலைக்கிற நிலை நம் தேசத்தில் வந்தாகி விட்டது.

ஒரு: அப்படி ஏதாவது சண்டை சச்சரவு இல்லாமலிருந்தால் உங்களுக்கும் எனக்கும் ஒரு கேஸ்கூட வராது.

(அப்பொழுது ஆபீஸ் பையன் வந்து)

ஆபீஸ் பையன்: ஒரு 'கேஸ்' கொண்டு வந்திருக்கிறேன்.

ஒரு: நமக்கு ரொம்ப கேஸ் இருக்கிற மாதிரி பாவனை செய்யணும்? கேஸ் கட்டை எல்லாம் எடு.

மற்: அப்போ நம்ம கேஸ் டைரியை எடுத்துப்பார். என்ன என்ன என்கேஜ்மெண்ட் இருக்குது சொல்லு.

ஒரு: ஸ்ரீமான் ஜனநாயகம் நம்மை வாதாடச் சொல்கிறார் மதுவிலக்குச் சட்டத்தை எதிர்த்து. மது என்ற வார்த்தைக்கு தேன் என்று தான் பொருள் என்று அவர் விளக்கம் கூறியிருக்கிறார். ஆகவே மதுவிலக்குச் சட்டத்தை எதிர்த்து வாதாடணும்.

மற்: இப்படி வாதாடினா உடம்பு என்னத்துக்காகும்? ஒன்றுக்கும் பயப்படாதே! இப்போது நான் வக்கிலாகவும், நீ கட்சிக்காரனாகவும் பேசுவோம். ஹூம். நீ கட்சிக்காரன்......பேசு.

மற்: ஒருவருக்கு 500 ரூபாய் கொடுத்தேன். வட்டி 25 ரூபாய் ஆகிவிட்டது. மேற்கொண்டு 250ஐக் கையிலே ரொக்கமாகக் கொடுத்து 1000 ரூபாய்க்கு நோட்டு எழுதி வாங்கினோம். அவங்கிட்டேயிருந்து பணம் வர்ர வழியைக் காணோம். அதற்கு ஏதாவது சட்ட பாயிண்ட் இருக்கிறதா?

ஒரு: நான் கேஸ் எடுக்கிறதில்லே. எடுத்தாலோ கடைசி மூச்சு வரை விடுறதில்லே.

(வண்டிக்காரன் ஒருவன் 'கேஸ்' பெட்டியைக் கொண்டு வருகிறான். அவன் 'கேஸ்' பெட்டியை வைத்துவிட்டு கூலி கேட்கிறான். அவனுக்கு இருந்த சில்லரையைக் கூலியாகக் கொடுக்கிறார்கள்)

ஒரு: டேய் பையா!

பையன்: எசமான்...

ஒரு: இது என்ன பெட்டி?

பை: 'கேஸு'ங்கோ.

ஒரு: பெட்டி என்று சொல்லு! பெட்டியைப்போய் 'கேஸு' 'கேஸு'ன்னா... ..

ஒரு: இது 'கேஸ்' இல்லே, பெட்டி. பெட்டின்னுசொல்.

மற்: நிஜமாகவே 'கேஸ்' வந்தா 'பெட்டி'ன்னு சொல்லி விடப் போருன்.

ஒரு: சரி, உள்ளே கொண்டுபோய் வை.

பை: இது என்னுங்கோ இது. கே. கே. கிருஷ்ணசாமின்னு பெயர் போட்டிருக்குது. நீங்க வாங்கி வச்சுக்கிட்டீங் களே.

ஒரு: (மற்ெருருவரிடம்) நீங்களாவது பார்க்கக் கூடாதா? கையிலே இருந்த நாலு காசுகூட வெட்டியாப் போயி டுச்சு. இந்த மாதிரி கேஸ் வந்தா நம்மாலே தாங்க முடியாது.

காட்சி 22

(பாட்டு: கண்கண்ட தெய்வமே)

ஸ்ரீதர்: சாரதா! உன் கண்ணைக் கெடுத்துக் கையில் கோல் ஊன்றி நடக்கும் நிலையில் கொண்டுவந்துவிட்டேன்.

சாரதா: நீங்களா என் கண்ணைக் கெடுத்தீர்கள்? விதியின் செயலுக்கு யார் பொறுப்பு.

ஸ்ரீதர்: விதியின் செயல்! இல்லை சாரதா இல்லை. என் அகம்பாவத்தினுல் உன் கண்களை இழக்கும்படி செய் தேன். உன்னை வைத்துக் காப்பாற்ற வேண்டிய நான் இப்படிச் செய்துவிட்டேன் சாரதா.

சாரதா: குடம் குடமாகக் கண்ணீர் விட்டாலும் பயன் என்ன பயன்? உங்களுக்கு உரிமை உள்ள காரியத் தைத்தானே செய்தீர்கள். வேெருரு டாக்டர் இப்படி ஆக்கியிருந்தால் எனக்கு இந்த ஆறுதலோடு இருக்க முடியுமா? உண்மையில் நான் எதையும் இழக்கவும் இல்லை. எதையும் இழக்கவும் முடியாது. நீங்கள்தான் என்னுடைய கண்கள்.

ஸ்ரீதர்: இந்த நிலையில்கூட உனக்கு எவ்வளவு பொறுமை சாரதா? நான் உனக்கிழைத்த தீங்குக்கு எல்லையே இல்லை.

சாரதா: இனி நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

ஸ்ரீதர்: எப்பொழுதும் உன் பக்கத்தில் இருந்து உன் கண் இல்லாத குறையை நிவர்த்தி செய்யவேண்டியது தான்...

சாரதா: நீங்கள் செய்யக்கூடியது ஒன்றுதான்.

ஸ்ரீதர்: என்ன சாரதா?

சாரதா: வேறு ஒன்றுமில்லை.

ஸ்ரீதர்: என்ன செய்யவேண்டும் சாரதா?

சாரதா: ஏதாவது வேலை பார்க்க ஆரம்பித்துவிட்டால் உங்களுக்கு நேரம் போவதே தெரியாது. வைத்தியத் தொழில் ஆரம்பித்துவிட்டால் சாப்பிடவும் பேசவும் கூட நேரம் ஒன்றும் இருக்காது.

ஸ்ரீதர்: ஆமாம் சாரதா!

சாரதா: நீங்கள் ஒரு லட்சிய புருஷராக வாழும்பொழுது நான் என் கடமையைச் செய்யத் தவறிவிடுகிறேன். ஆகையால் நீங்கள் இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்.

ஸ்ரீதர்: சாரதா! என்னை மடையன் என்று நினைத்து என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்றுதானே இப்படி எல்லாம் பேசுகிறாய்—இதை மட்டும் சொல்லாதே. நான் அவ்வளவு அயோக்கியனா சாரதா? நிச்சயமாக அயோக்கியன் அல்ல. இதோ சத்தியம் செய்கிறேன். நம் குல தெய்வத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். மனித சக்திக்கு மேற்பட்ட எந்த சக்தியாக இருந்தாலும் அதன்மீது சத்தியம் செய்துகொள்கிறேன். நான் வேறு கல்யாணம் செய்துகொண்டால் என் கடமையைத் தவறியவனாவேன். மாதாவைக் கொன்ற மாபாவம் என்னைச் சேரும் சாரதா! நீ ஒரு சாதாரணப் பெண் அல்ல. நீ என் கண்கண்ட தெய்வம்!

சாரதா: (தனக்குள்) என் வாழ்க்கையில் புயல் ஒழிந்தது, பயம் ஒழிந்தது.

காட்சி 23

(பாட்டு: இன்ப வீடது)

சாரதா: ஆகா! எனக்குக் கண் தெரியாதது பெரிய பாக்கியம் ஆகிவிட்டது—பெரிய பாக்கியமாகிவிட்டது.

அத்தை: என்ன சாரதா?

சாரதா: அத்தை! அத்தை! அவர் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சபதம் செய்துவிட்டார். எனக்கு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது பார்த்தியா அத்தை.

அத்தை: இதுக்குத்தானு இவ்வளவு பெரிய சப்தம்?

சாரதா: என்ன அத்தை! அப்படிச் சொல்லீட்டிங்களே.

அத்தை: பின்னே என்னவாம்?

காட்சி 24

(ஸ்ரீதர் அத்தையிடம்)

ஸ்ரீதர்: சாரதாவுக்கு தைரியம் சொல்!

அத்தை: சாரதாவுக்குத் தைரியமா? இப்போ அவள் தைரியத்தினுல்தானே அப்பா நாங்களெல்லாம் இருக்கிருேம்.

ஸ்ரீதர்: நிச்சயமாகச் சொல்கிறேன். இனி எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் மானசீகமாகக் கடவுளைப்போல் வணங்குவேன். நம்முடைய கண்களுக்குத்தெரியாமல் எவ்வளவு தியாகத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டிருக்கிருர்களோ?

(இச் சமயத்தில் சாரதா)

சாரதா: நீங்கள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும். (ஸ்ரீதர் ஒன்றும் பேசாதிருக்கிருன்.) ஏன் பேச மாட்டேன் என்கிறீர்கள்?

ஸ்ரீதர்: நான் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவேன் என்பதற்கு அடையாளம்.

சாரதா: நீங்கள் வீட்டுக்குள்ளேயே இருந்தால் கஷ்டமாகத்தான் இருக்கும். அண்ணா சிநேகிதர்களோடு தோட்டத்தில் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்களும் போய் பேசிக்கொண்டிருங்கள்.

ஸ்ரீதர்: நான் அவர்கள் மத்தியில் எப்படி இருப்பேன்?

காட்சி 25

(தன் சிநேகிதர்களோடு பேசிக் கொண்டிருக்கும் சங்கரை முனிசாமி கூப்பிட வருகிறான்)

முனி: அம்மா உங்களைக் கூப்பிட்டு வரச் சொன்னாங்க.

காட்சி 26

சாரதா: யாரது அண்ணாவா?

சங்: ஏனம்மா கூப்பிட்டே?

சாரதா: ஆமா! எனக்கு ரொம்ப பயமா இருக்குது.

சங்: ஏன்? எதற்கு சாரதா?

சாரதா: அவர் இப்போ இருக்கிற நிலைமையைப் பார்த்தால் ரொம்பப் பயமாக இருக்குது.

சங்: யார், ஸ்ரீதரன் தானே? நீ எதற்கும் பயப்படாதே அம்மா! நான் பார்த்துக் கொள்கிறேன்.

காட்சி 27

(சங்கரும் ஸ்ரீதரும்)

சங்: சாரதா, நீயே கடவுள் மாதிரி பூஜித்துக் கொண்டிருக்கிறாள்.

ஸ்ரீதர்: நீ இப்படி வருத்தப்படுவதால் பிரயோஜனம் ஏதாவது இருக்கிறதா?

சங்: சாரதா உன்னை தெய்வமாக நினைத்துக் கொண்டிருக்கிறாள். இன்னும் அவள் மனதை வருத்தப்படச் செய்வது உன் எண்ணமா?

ஸ்ரீ தர்: இல்லே! இல்லே! இந்த நிலேமையில் இல்லே; புஷ்பத் தால் பூஜிக்க வேண்டிய தெய்வம் சாரதா.

சங்: சாரதாவின் மனது எவ்வளவு நொந்து போய் இருக் கிறது தெரியுமா?

ஸ்ரீ தர்: என்ன செய்ய வேண்டும் சொல்?

சங்: கொஞ்ச நாளேக்கு என் கிராமத்திற்குச் சாரதாவும், நீங்களும் வாருங்கள். மனசு நிம்மதியாக இருக்கும்.

காட்சி 28

(ஸ்ரீதரும், சாரதாவும் கிராமத்திற்குச் செல்கின்றனர். சாரதா சங்கரிடம்)

சாரதா: இன்றைக்குத்தான் அண்ணு, எனக்குப் புதிதாக கல்யாணமாகி புருஷன் வீட்டுக்கு போகிறமாதிரி இருக்குது.

சங்: போய் வா சாரதா. நீ என்னேவிட புத்திசாலி. உனக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்.

சாரதா: (தன் கணவரிடம்)சங்கரையும் நம்முடைய ஊருக்கு வரச்சொல்லுங்கள்.

சங்: அடுத்தமாதம் வருகிறேன்.

(இந்த சமயத்தில் தபால் வருகிறது. அதை சங்கர் வாங்கிக் கொண்டு)

சங்: தபால் வந்திருக்கிறது.

சாரதா: யார் அண்ணு போட்டிருக்கிருர்கள்.

சங்: அடடே! ஸ்ரீதரன் பஸ்ட் க்ளாஸில் பாஸ் பண்ணின சர்டிபிகேட்.

ஸ்ரீ தர்: அதைக் கிழிச்சுப்போடு.

சாரதா: போன ஜன்மத்திலேயே எனக்குப் பிரசண்ட்டாகக் கொடுத்து விட்டீர்கள். இது எனக்குச் சொந்தம்.

சங்: ஸ்ரீதர்! நம்பிக்கை இழக்கக்கூடாது. மேற்கொண்டு பிராக்டீஸ் ஆரம்பிக்கிறதைப் பற்றி யோசனே செய்.

ஸ்ரீதர்: ஆமா! ஏதாவது ஆள் இல்லாத காடா இருந்தா பார்த்துச் சொல்.

சாரதா: நம்ம ஊருக்குப் போனல் அங்கேயே பிராக்டீசை ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறேன். நமஸ்காரம் அண்ணு! அடிக்கடி வரப் போக இரு அண்ணு. நீயும் ஒரு கல்யாணம் செய்துகொண்டால் எனக்குப் பிறந்த வீடு மாதிரி நினைத்து வரப் போக சௌகர்ய மாய் இருக்கும்.

காட்சி 29

(கிராமத்திற்கு ஸ்ரீதரும் சாரதாவும் வந்ததும் கிராம வாசிகள் மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்கின்றனர்)

கி. வா: வணக்கம்! வணக்கம்!

ஸ்ரீதர்: என்ன எல்லோரும் சௌக்கியமா? சாரதா இறங்கு.

ஒரு மூஸ்லீம்: டாக்டர் ஐயா சலாமுங்க.

வ. கா: சாமான்களெல்லாம் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டதா?

ஸ்ரீதர்: எல்லாம் வந்துவிட்டது. (சாரதாவிடம்) உன்னைப் பார்க்க எல்லோரும் வந்துவிட்டாங்க.

ஒரு கிராமவாசி: நல்ல வேளை! நீங்கள் வந்து சேர்ந்துட் டீங்களே. தலைவலி ஜுரம்முன்னு மூன்று மைல் போகவேண்டி இருக்குங்க.

காட்சி 30

(கிராமவாசிகள் எதற்கும் இப்பொழுது ஸ்ரீதரையே நாடுகின்றனர். ஸ்ரீதருக்கு இப்பொழுதெல்லாம் திடீர் திடீரென்று அழைப்புகள் வருகின்றன)

ஒருவர்: ஐயா! ஐயா! என் தம்பிக்கு நாய் கடித்துவிட்டது. கொஞ்சம் வாங்களேன்.

சாரதா: என்ன பேசாமல் இருக்கிறீங்களே? கொஞ்சம் போங்களேன்.

ஒரு: சீக்கிரம் வாங்க ஐயா.

ஸ்ரீதர்: முனிசாமி! அந்த 'பாக்'கை எடுத்துக்கொண்டுவா.

காட்சி 31

(ஸ்ரீதரின் சிகிச்சையால் குணம் பெற்ற பெண்)

பெண்: உங்களை சதம் என்று நம்பினேன். தெய்வம் மாதிரி எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்தீர்கள். நாங்க பட்டணம் போறோம். இதை உங்ககிட்டே சொல்லி விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்.

ஸ்ரீதர்: பட்டணம் போனதும் இந்த டானிக்கை வாங்கி தினமும் இரண்டு வேளை கொடுங்கோ.

பெண்: சரிங்க.

காட்சி 32

நோ: ஆ! ஆ!

(ஸ்ரீதர் ஸ்டெதஸ்கோப் வைத்துப் பார்க்கிறான்)

நோ: இங்கே! இங்கே!

ஸ்ரீதர்: உனக்கு ஒன்றுமில்லே. ஒரு மூன்று நாளைக்கு ஓய்வு எடுத்துக்கொள்.

நோ: எப்படிங்க ஓய்வெடுக்கிறது? ஒரு நாளைக்கு ஓய்வு எடுத்துக்கொண்டால் அடுப்புலே பூனை படுத்துக்குங்களே.

காட்சி 33

(ஸ்ரீதர் சாரதாவிடம்)

ஸ்ரீதர்: சாரதா! ஊர்லே எல்லோருடைய வியாதியையும் குணப்படுத்துகிறேன். ஆனால் உன் கண்தான்......

சாரதா: இப்பொழுது எனக்கு ஒன்றுமில்லே. இது ஆபீஸ் நேரம்—வீட்டுக்குள்ளே வரக்கூடாது. உம், போங்கோ.

காட்சி 34

(ஸ்ரீதரிடம் ஒரு முஸ்லீம்)

முஸ்: சலாமுங்க! உங்க புண்ணியத்திலே குழந்தைக்கு நல்லா ஆயிடுச்சுங்கோ. ஐயாவுக்கு நான் என்ன கொடுக்கங்கோ!

ஸ்ரீதர்: 100 ரூபா கொடு.

முன்: ஆ.

ஸ்ரீதர்: 50 கொடு.

முஸ்: (முடியாது என்பதைத் தெரிவிக்க தலையை அசைக்கிருன்)

ஸ்ரீதர்: சரி 10 கொடு.

(முஸ்லீம் முடியாது என்பதைச் சைகையின் மூலம் தெரிவிக்கவே)

ஸ்ரீதர்: சரி 5 கொடு.

முஸ்: எங்கிட்டே இருக்கிறது 2 ரூபாதான். நீங்க ரொம்ப பெரிய மனசு பண்ணணும். சந்தோஷமா வாங்குங்கோ.

முனிசாமி: நீங்க இந்தமாதிரி வைத்தியம் செய்யுறீங்கன்னு தெரிஞ்சா பணக்காரங்ககூட ஏழையைப்போல் வருவாங்கோ.

ஸ்ரீதர்: (முஸ்லீமிடம்) இந்தா இதோடு 8 ரூபாய் இருக்குது- வாங்கி டானிக் வாங்கிக்கொடுங்கோ.

முஸ்: அல்லா உங்களுக்கு எல்லாம் தருவார்.

காட்சி 35

(கிராமத்திலுள்ள முக்கியமான ஒருவர் ஸ்ரீதரைப் பார்க்க வருகிருர்)

கிரா: டாக்டர் எங்கே போயிருக்கிருர்?

முனி: ஆஸ்பத்திரிக்கு இன்னும் கொஞ்சம் பெரிய இடமா பார்க்க போயிருக்கிருர்.

கிரா: அடடா! எனக்குத் தெரியாமல் போச்சே. இதை ஐயா கிட்டே கொடுங்கோ.

முனி: இது எல்லாம் எதுக்கு?

கிரா: இது என் குழந்தைக்குப் போன உயிரை ஒரு ஊசியிலே திருப்பிக்கொடுத்துட்டார். பணம் கொடுத்தேன். வேண்டாம்னு சொல்லிவிட்டார். இது........

(இந்தச் சமயத்தில் வேலைக்காரி தங்கம்மாள்)

தங்: ஓஹோ! இது உங்க மனத்திருப்திக்காக கொடுக்கிறீங்களா?

கிரா: முனிசாமி! எனக்கு இந்த ஊர்லே நிறைய செல்வாக்கு உண்டு. ஐயாவுக்கு ஏதாவது வேணும்னு எங்கிட்டே சொல்லு. உனக்குக்கூட ஏதாவது வேணும்னு என்னிடம் சொல்லு. போய்வரட்டுமா? (போகிறான்)

தங்க: (முனிசாமியிடம்) இந்தப் பழத்தைப் பார்த்தால் எவ்வளவு ஆசையா இருக்குது பார்த்தியா? இதைப் பார்த்தாலே பாதி வயிறு நிறைஞ்சு போயிடும் போல இருக்குது.

முனி: வராமே! இன்னும் கொஞ்ச நாள்லே பாரு. நிலத்தை உழுகிறவனுக்குத்தான் நிலம். அவங்களுக்குத்தான் சிலை கட்டப்போறாங்க.

காட்சி 36

(சாந்தாவும் ஸ்ரீதரும்)

சாரதா: வாங்க! வாங்க! ஏது இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்க?

ஸ்ரீதர்: ஒரு 'பேஸண்ட்' டைப் பார்க்கப்போனேன். அப்படியே உன்னையும் பார்க்கலாம் என்றுதான்....

சாரதா: என்னால் உங்களுக்கு ஒரு உதவியும் செய்ய முடியவில்லை. வர வர உங்களுக்குச் சிரமம் அதிகமாக ஆரம்பித்துவிட்டது.

ஸ்ரீதர்: சிரமத்தைப் பார்த்தால் நல்ல பேர் வராது; பணம் வராது. (முனிசாமியிடம்) அம்மாவுக்குப் படுக்கை மாற்ற துணி கொடு.

முனி: நான் தருகிறேன்.

தங்: இந்தாங்க அம்மா காபி. சூடு சரியா இருக்குதா பாருங்கோ.

ஸ்ரீதர்: இங்கேகொண்டுவா. நான் ஆத்திக்கொடுக்கிறேன்.

(ஆத்தி சாரதாவிடம் கோடுத்து) சூடு சரியாக இருக்கிறது.

(தங்கம்மா தயங்கிக்கொண்டே நிற்கிருள்)

ஸ்ரீதர்: என்ன வேண்டும்?

தங்: அம்மா புடவையைத் துவைக்க வேணும்.

ஸ்ரீதர்: ஏன் நிற்கிறே? எடுத்துக்கொண்டு பேர். உன்னை விட்டு என்னுல் இருக்க முடியாது சாரதா! உனக்கு ஏதாவது வேணுமா? ஏதாவது வேணும் என்று கேள் சாரதா? இல்லேன்னு அதை எடு இதை எடுன்னு வது சொல்லு. நீ சொல்லி நான் கேட்க வேண்டும் என்று ஆசையாக இருக்குது. தண்ணீர் கொண்டுவா, அந்த பெட்டியை இங்கே கொண்டுவா என்று ஏதாவது சொல்.

காட்சி 37

ஒருவர்: ஐயா! ஐயா! மிராஸ்தார் ஐயா இந்தப் பணத்தை உங்க கிட்டே கொடுத்துவிட்டு வரச் சொன்னுர்.

ஸ்ரீதர்: சாயங்காலம் வந்து பார்க்கிறேன் என்று சொல்.

காட்சி 38

ஸ்ரீதர்: சாரதா! இந்த ஊருக்கு வந்ததும் நமக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது. இப்போ மிராஸ்தார் ஆள் வீடு தேடி வந்து பணத்தைக் கொண்டு வந்து தருகிருன்.

சாரதா: நீங்க கோடி கோடியா சம்பாதிங்கோ. என்னை மட்டும் மறந்து விடாதீர்கள்.

ஸ்ரீதர்: பணம் என் மனதை மாற்றி விடுமா சாரதா? சரி, நேரமாகி விட்டது. வெளியில் நான் பேஷண்டுகளைப் பார்க்க வேண்டும். நான் வருகிறேன் சாரதா.

காட்சி 39

(வக்கீல் நண்பர்களுடன் சங்கர்)

ஒருவர்: என்ன சங்கர்! நேரமாகி விட்டது. இன்னும் இங்கேயே உட்கார்ந்திருக்கியே? வர வர ரொமப மனசைக் கஷ்டப்படுத்திக்கிறியே சங்கர்.

சங்: என்னப்பாசெய்யலாம். சாரதாவுக்கு இவ்வளவுபெரிய ஆபத்து வரும் என்று எதிர்பார்க்கவில்லை.

ஒரு: ஸ்ரீதர் செய்த தவறுக்கு நீ வருத்தப்பட்டு என்ன செய்வது?

சங்: அவனுடைய தவறு மட்டுமல்ல, நானும் சேர்ந்துதான் தவறு செய்து விட்டேன். என் காலம் எல்லாம் கண்ணீர் விட்டு கலங்கினுல்தான் அதைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

ஒரு: என்ன சங்கர்! நீ சொல்வது...?

சங்: ஸ்ரீதரனுக்குத் தெரியாமல் ஒரு நாள் மருந்து வாங்கிக் கொடுத்தேன். உள்ளுக்குச் சாப்பிட வேண்டிய மருந்தைக் கண்ணுக்கு ஊற்றிக் கொண்டாளாம். அதன் பயன் அவளுக்குக் கண் போயிற்று. ஆனுல் என் கஷ்டம் என்னை விட்டுப் போகவில்லை. இதுவரை நான் இதை யாரிடத்திலும் சொல்லவில்லை.

காட்சி 40

(பாட்டு: "வருங்காலத்தலைவன்")

(ஸ்ரீதரின் பிறந்த நாளை விமரிசையாக வீட்டில் சாரதா கொண்டாடுகிறுள்)

ஸ்ரீதர்: சாரதா! இது எல்லாம் என்ன? என்ன விசேஷம் இன்றைக்கு?

ஒரு குழந்தை: எல்லாம் எனக்குத் தெரியும். அக்கா முன்னமே சொல்லிவிட்டார்கள். இன்றைக்குப் பிறந்த நாள்.

சாரதா: ஆமாம். இன்றைக்குப் பிறந்த நாள். நீங்க மருந்து கொடுத்துச் சௌக்கியமான குழந்தைகளுக்கு எல்லாம் விருந்து.

ஸ்ரீதர்: அப்போ இன்றைக்கு ஒரு சந்தோஷச் செய்தி சொல்லப்போகிறேன்.

சாரதா: என்ன அது?

ஸ்ரீதர்: ஒரு பெரிய பங்களா வாங்கப் போகிறேன். இந்த வீட்டை ஆஸ்பத்திரியாக மாற்றப் போகிறேன்.

காட்சி 41

(வக்கீல் நண்பர்களும் சங்கரும்)

ஒருவர்: கொஞ்சம் சக்கரை கொண்டுவா. சக்கரை இருந்தா என் வாயில் போடு.

சங்: என்னப்பா?

ஒரு: உன் 'பிரதர் இன்லா'வைக் கிராமத்துக்கு அனுப்பச் சொன்னேன் அல்லவா! பாரப்பா! கிராமத்திலே அவருக்கு இருக்கிற மதிப்பு, பணம், புகழ் அதோடு பெரிய வீடு ஒன்று வாங்கிட்டாராம்.

மற்றொருவர்: அப்போ கிரகப் பிரவேசத்துக்கு ஒரு பெரிய விருந்து.

சங்கர்: இருக்குதுன்னு சொல்லுங்கோ. சேசே! ஸ்ரீதருக்கு அதில் எல்லாம் பிரியம் இல்லே. ஒரு நல்ல நாளாப் பார்த்து புது வீட்டுக்குக் குடிபோய்விட்டதாகத் தகவல் சொல்லி அனுப்பியிருக்கிறான்.

ஒரு: ஏதோ மங்களகரமா இருந்தால் சரிதான்.

காட்சி 42

(ஸ்ரீதர் புது பங்களாவுக்குப் போனதும் முனிசாமியும் வித விதமான உடை அணிந்து திரிகிறான். இதைக் கண்ட வேலைக்காரி தங்கம்மா)

தங்: அட ஐய! யாரோ பெரிய ஆள் வந்திருக்கிருரேன்னு பார்த்தா நீயா? சட்டை எல்லாம் மாறிப் போச்சே!

முனி: அந்தச் சட்டையை எல்லாம் இப்போ சட்டை பண்ற தில்லே...கிளீனர் இல்லே.

தங்: ஆ......

முனி: கிளீனர். அதாவது இப்போத்தான் துடைக்க ஆரம் பிச்சிருக்கேன் கார். இன்னும் கொஞ்சநாள் போனுப் பாரேன்.

தங்: என்னத்தை?

முனி: அருச்சுன மகாராஜாவுக்குக் கிருஷ்ண பரமாத்மா என்ன செய்தார்? அருச்சுனன் தேரை அவர் ஓட்ட லியா? அதைப் போல ஐயாவுக்கு நான்தான் கார் ஓட்டப் போறேன்.

தங்: ஐயோ! நீயா? நீ கார் ஓட்ட ஆரம்பிச்சா அப்போ வழியிலே போறவங்களை எல்லாம் மகமாயிதான் காப்பாத்தணும்.

முனி: உ...ம். நாஞ அவங்களைத் தேடிப் போகமாட்டேன். அவங்களா வந்து விழுந்தா நான் என்ன செய்வது?

காட்சி 43

சாரதா: (முனிசாமியிடம்) ஐயா வரலியா?

முனி: இல்லே அம்மா.

சாரதா: இப்படி நீங்க பணம் சம்பாதிச்சது போதும் என்று சொல். எதுக்கு கொஞ்சங்கூட ஓய்வில்லாமே...

முனி: உங்களை அமெரிக்காவுக்கு அழைத்துக்கொண்டு போய் வரணுமாம். அதற்குப் பணம் வேண்டாமா? என்று கேட்கிருர்.

சாரதா: (முனிசாமியிடம்) தினமும் கொஞ்ச நேரம் முகம் கொடுத்துப் பேசினலே எனக்கு கண் வந்த மாதிரி தான் என்று சொல்லுவதுதானே உங்க ஐயாவிடம்?

காட்சி 44

(ஸ்ரீதர் கிராமத்தில் நடக்கும் ஒரு நாடகத்தைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கிருன். பக்கத்தில் முக்கிய கிராமவாசி ஒருவர்)

கிரா: சதா வைத்தியம் பார்த்துக்கொண்டிருக்கிற உங்களுக்கு இதைப் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கும்.

ஸ்ரீதர்: நிஜம்தான்.

கிரா: இதற்கு நீங்கள் வந்ததுதான் ஆச்சர்யம். கூட அம்மாவை அழைத்துக் கொண்டு வரலியே?

மற்ருெருவர்: அந்த அம்மாளை எப்படிக்கொண்டு வர முடியும். அந்த அம்மாளுக்குத்தான் கண் தெரியாதே. இவரு இவ்வளவு பெரிய டாக்டர் ஆனதே அந்த அம்மா கண்ணுலேதான்.

கிரா: ஏன் டாக்டர்! உங்களுக்குப் புகழ் இல்லையா? பணம் இல்லையா? பேர் இல்லையா? ஏன் நீங்க இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது?

காடசி 45

ஸ்ரீதர்: முனிசாமி! பெட்டியைக் கொண்டுவா.

(இந்தச் சமயம் அவன் பிடித்திருந்த சாமான் கை நழுவிக் கீழே விழுகிறது)

ஸ்ரீதர்: என்னடா? போ அங்கே. பத்து நிமிஷம் நிம்மதியா இருக்கணும். இந்தாடா! கீழே விழுந்ததை எடுத்து வைத்துவிட்டுப் போனல் என்ன?

முனி: லெட்டர் வந்திருக்கிறது.

(ஸ்ரீதர் லெட்டரைப் பார்த்துவிட்டு)

ஸ்ரீதர்: இந்தாடா! இதை அம்மாகிட்ட கொண்டுபோய்ப் படித்துக்காட்டு—அண்ணுவிடமிருந்து வந்திருக்கிறது என்று சொல்.

முனி: எனக்குப் படிக்கத் தெரியாதுங்களே!

ஸ்ரீதர்: (கோபமாக) உனக்குப் படிக்கத் தெரியவில்லை என்ருல் தங்கம்மாவிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லு.

காட்சி 46

(ஹேமாவும் அத்தையும். ஹேமா அத்தையைப் போட்டோ எடுக்கிருள்)

ஹேமா: அடடே, இப்படி உட்கார்ந்திருக்கிறீர்களே!

அத்தை: போட்டோ எடுத்துக்கொண்டால் ஆயுசு குறைஞ்சிடும்னு சொல்ருங்களே.

ஹேமா: அது எல்லாம் இல்லை; ஆயுசு வளரும்.

அத்தை: ஓஹோ! நீங்க சினிமா ராணிங்க. காலை இப்படி வைத்துக்கொண்டு ஓரக்கண்ணுல ஒரு தினுசாகப் பார்க்கிறேன். இந்த மாதிரி பார்க்கவா?

ஹேமா: ஓரக்கண்ணுலே பார்க்க வேண்டாம். பேசாமே அப்படியே இருங்கோ.

(ஹேமாவின் தகப்பனுர்)

தகப்: என்ன அம்மா! அத்தையை ரொம்பக் கஷ்டப்படுத்துறியே?

ஹேமா: இல்லேப்பா. எங்க காலேஜிலே போட்டோ எடுத்துச் சேர்க்கிருங்க.

தகப்: இது ஒரு தமாஷான காலம். என்ன இன்றைக்கு ரொம்பக் குஷியா இருக்கிறியே?

ஹேமா: எங்கே பார்த்தாலும் விருந்து கொடுத்துக் கொண்டே இருக்கிருர்கள்.

தகப்: உன்னை எங்கும் கூப்பிடலியா?

ஹேமா: என்னையும் தான்.

காட்சி 47

(முனிசாமியும் தங்கம்மாவும்)

தங்: நீயும் உங்க ஐயாவும்! உங்கிட்டே ஏதாவது கேட்டால் சீன வெடி மாதிரியில்லே கோபிக்கிறே! அடேயப்பா! பணம் அதிகமா வரவர கோபமில்லே அதிகமாவருது.

முனி: ஆமா! முந்தி நாலு ரூபா வாங்கின இடத்திலே நாபபது ரூபா வருது. என்னமோ அந்தப் புண்ணிய வதி அந்த அம்மா கண்ணாலே கொடுத்தாங்க.

காட்சி 48

(கிராமத்திலுள்ள தாசர் ஒருவர் டாக்டர் ஸ்ரீதருடன் பேசிக்கொண்டிருக்கிறார்)

இ. த: இப்போ பத்தாயிர ரூபா கொடுத்தா முப்பதாயிர ரூபா சொத்து வந்துவிடும். ஆசாமி இப்போ ஒரு இக்கட்டிலே மாட்டிக்கொண்டுவிட்டான். இதுக்காக நான் பத்துநாளா அலேஞ்ச அலச்சலும்...நான் எதுக் காகச் சொல்றேன்னா.

(இந்தச் சமயத்தில் கிராமவாசி ஒருவர் வந்து)

கி. வாசி: டாக்டர் ஐயா! என் பேரப் பிள்ளைக்கு......... கொஞ்சம் கையோடு வந்தா......

ஸ்ரீதர்: மணி என்ன ஆச்சு? இப்போ எங்கே வர்ரது? உங்களுக்கு நேரம் காலம் இல்லே.

கி. வாசி: டாக்டர் ஐயா கொஞ்சம் பெரிய மனசு பண் ணுங்கோ.

ஸ்ரீதர்: இந்தாப்பா! நான் இப்போ ஒரு முக்கியமான விஷயம் பேசிக்கொண்டிருக்கிறேன். தேவையிருந்தா பணத்தையும், குழந்தையையும் இங்கே கொண்டுவா.

(இப்பேச்சு நடந்துகொண்டிருந்தும் தன்னுடைய பேச்சை விடாது பேசுகிறார் கிராமத் தாசர்)

கி. த: அதற்காக நான் பட்ட கஷ்டம்...என் கஷ்டத்தை விட்டுத் தள்ளுங்கோ, இதிலெ ஒரு வில்லங்கமும் கிடையாது.

(இந்தச் சமயத்தில் ஸ்ரீதர் கிராமவாசியிடம்)

ஸ்ரீதர்: போய் பணம் எடுத்துக் கொண்டு வரச்சொல்லி எவ்வளவு நேரம் ஆச்சு. ஏன் இப்படி நின்று கொண் டிருக்கிறே? ஒழுங்காப் போகப் போறியா என்ன?

கி. த: கழுத்தைப் பிடிச்சித் தள்ளினாத்தான் போவாங்க. (ஸ்ரீதரிடம் பழைய விஷயத்தையே மீண்டும் பேசுகி

ளுர்) கண்ணுடி மாதிரி இடம். எப்போது வேண்டு மாஞலும் பணம் ஆக்கி விடலாம்.

கி. வாசி: என்னை எதுவேண்டுமாஞலும் செய்யுங்கோ சாமி. குழந்தை உயிர் துடித்துக் கொண்டிருக்கிறது. அல்லா உங்களுக்கு எல்லாம் தருவார்.

ஸ்ரீதர்: அல்லா கொடுக்கிறது கொடுக்கட்டும். நீ என்ன தரப்போறே? கொஞ்ச நேரமாவது நம்பவேலையைக் கவனிக்க விட மாட்டேங்கிறுங்களே!

(இக்காட்சியை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சாரதா வேலைக்காரி தங்கம்மாளிடம்)

சாரதா: ஐயாவைக் கொஞ்சம் கூப்பிடணும்.........வேண்டாம்......வேண்டாம். பக்கத்துவீட்டுக் குழந்தையைப் பார்க்கவே இப்படி இருக்கிருர். பணம் ஒரு கருவி. (கிராமவாசியைக் கூப்பிட்டு) இந்தாப்பா! இந்தப் பணத்தை வைத்துக்கொள். உன் குழந்தைக்கு வேண்டியதைச் செய். என் கணவர் நல்லவர். என்னமோ போதாத காலம். அவருக்கு நல்ல புத்தி திரும்ப வேண்டும் என்று அல்லாவை வேண்டிக்கொள்.

காட்சி 49

(ஸ்ரீதரும் சாரதாவும்)

ஸ்ரீதர்: சாரதா! சாரதா! அதிர்ஷ்டம் நம்மைத் தேடி வருகிறது. எவ்வளவு பெரிய இடம் தெரியுமா? ரொம்ப சீப்பா வாங்கிட்டேன். ஏன் சாரதா ஒரு மாதிரியா இருக்கே?

சாரதா: எப்படி இருக்கிறேன்?

ஸ்ரீதர்: முகம் எல்லாம் வாடிப்போய்!

சாரதா: ஆமா. கொஞ்ச நாளாகவே உங்களிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று தோன்றுகிறது.

ஸ்ரீதர்: அதற்கென்ன? சௌகர்யமாக ஒரு நாள் பேசலாம்.

சாரதா: நீங்கள் ஏன் மாறிவிட்டீர்கள்?

ஸ்ரீதர்: மனிதன் அந்தஸ்துக்கு தகுந்த மாதிரி மாறவில்லையென்றால் என்ன இருக்கிறது?

சாரதா: இந்தப் பேச்சு எனக்கும் தெரியும். ஆனால் என்றைக்குமே மாருத பொருள்களும் உண்டு. அவைகள் தான் வாழ்க்கையின் அஸ்திவாரம். அஸ்திவாரமே ஆட்டம் கண்டுவிட்டால் எல்லாவற்றிற்கும் ஆபத்துத்தான்.

ஸ்ரீதர்: பெண்களுக்கே கர்வம் அதிகம். அநேக பெண்கள் தங்கள் கணவன் சம்பாதிக்கவில்லையே என்று கஷ்டப்படுவார்கள்—சிலருக்குப் புருஷன் பிரியம் இன்னது என்று தெரியாமல் இருக்கும். ஆனால் அவர்கள் தான் ஒருவித கர்வமும் இல்லாமல் கஷ்டப்படுகிருர்கள். என்னை ஏன் சாரதா இவ்வளவு கடுமையாகப் பேசும்படி செய்துவிட்டாய்?

சாரதா: தெய்வம் என் பக்கத்தில்தான் இருக்கிறது.

ஸ்ரீதர்: தெய்வம் எல்லோர்க்கும் பொது. உன் பக்கத்தில் இருப்பதாக எண்ணிக் கர்வப்படாதே.

காட்சி 50

(ஹேமா வீட்டில்)

ஹேமா: அப்பாடா! இன்றோடு கடைசிப் பரீட்சை ஒழிந்தது. இனிமேல் புஸ்தகத்தின் மூஞ்சிலே முழிக்க வேண்டாம்.

ஹேமாவின் தகப்பனார்: இந்தாம்மா உன் பேச்சேன் இவ்வளவு முட்டாள்தனமாக இருக்கிறது? மேலும் மேலும் படிக்க வேண்டும் என்று ஆசை இல்லையே?

ஹேமா: எங்கேயப்பா பஞ்சாயத்துக்குப் போனீங்களா? என்ன ஆச்சு?

அத்தை: ஆமா! ஆமா! ஊருக்கெல்லாம் பஞ்சாயத்து, ஆனால் மகள் ஹேமாவைப் பற்றித்தான் கொஞ்சங் கூட அக்கரை இல்லாமலிருக்கிறது.

ஹே. த: அதுக்கென்ன அவசரம்?

அத்தை: அது அது செய்யவேண்டிய காலத்தில் செய்தால்தானே நல்லாயிருக்கும். சரியப்பா! நான் ஊருக்குப்போறேன். அவளுக்குப் புது வீட்டையும், புது மச்சானையும் பார்க்க ஆசையா இருக்குமில்லே.

ஹே. த: அந்த ஆசை எல்லாம் இல்லே.

அத்தை: தான் யாரோ அன்னியன் வீட்டுக்குப் போற மாதிரிதான் பேசுறது. ஹேமாவுக்குக்கூட ஒருவிதத்திலே சகோதரன் முறை. ஸ்ரீதரன் நல்ல அழகு. அழகுக்கு மேலே குணம். புகழ். பெரிய டாக்டர்.

ஹே. த: நீ என்றைக்குமே யாரையும்புகழ்ந்துபேசமாட்டே! இன்றைக்குப் புகழ்ந்து பேசுறியே?

அத்தை: நான் நல்லவங்களை எப்போதும் நல்லவங்கன்னுதான் பேசுவேன். அப்போ ஹேமாவை என்னுடன் ஊருக்கு அனுப்புறியா?

ஹே. த: அப்போ சரி! ஏம்மா அத்தையோடு போய்விட்டு வா.

காட்சி 51

(ஸ்ரீதர் அவசர அவசரமாகப் புறப்படுகிறான். அப்பொழுது சாரதா)

சாரதா: என்னுங்கோ! ஆஸ்பத்திரிக்குப் போகப் போறிங்களா? தலைவலிக்குதுன்னு சொன்னீங்களே? இன்றைக்கு ஒரு நாள் வீட்டில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டால் என்ன?

ஸ்ரீதர்: நாள் பூராவும் வீட்டிலே தங்கியிருந்தால் மனிதனுக்குப் பைத்தியம்தான் பிடிக்கும். முனிசாமி! தங்கம்மா!

சாரதா: ஏன்? என்ன வேண்டும்?

ஸ்ரீதர்: (ஸ்டெதாஸ் கோப்பைக் கழுத்தில் மாட்டிக் கொண்டே) ஸ்டெதாஸ்கோப் எங்கே காணோம்? அது அது இருக்கவேண்டிய இடத்தில் இருக்கிறதில்லே. எல்லோர்க்கும் திமிர் அதிகமாப் போச்சு. எங்கே போனான் அந்த முனிசாமி? எல்லாத்தையும் ஒழிச்சு விட்டுப் புது ஆளைப் பார்க்கவேண்டியதுதான்.

சாரதா: நீங்கள் ஏன் கோபித்துக்கொள்கிறீர்கள்? நீங்கள் தானே மருந்தை யாரிடமோ கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்னீங்க?

காட்சி 52

(அத்தையும் ஹேமாவும் ஸ்ரீதர் வீட்டுக்கு வருகின்றனர். புது முகமான ஹேமாவை ஏற இறங்கப் பார்க்கிறான் ஸ்ரீதர்)

அத்தை: ஏனப்பா இப்படிப் பார்க்கிறே? வேற யாருமில்லே நம்ம ஹேமாதான். உன்னைப் பார்க்க வேண்டும் என்றுதான் வந்திருக்கிறா.

ஸ்ரீதர்: ஓ ஹோ! அன்றைக்குச் சொன்னீங்களே! இன்றைக்கு வரப்போவதாகத் தகவலே கிடையாது.

அத்தை: உனக்குத் தெரிந்திருந்தால் ஸ்டேஷனுக்கே கார் கொண்டு வந்திருப்பே. ஆஸ்பத்திரிக்குப் போக நேரமாச்சா? இன்றைக்கு வீட்டிலேயே இருக்கக் கூடாதா?

ஸ்ரீதர்: ஆமா! சாரதாகூட அப்படித்தான் சொன்னா. (சாரதாவிடம்) சாரதா! நீ சொன்ன மாதிரி இன்றைக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறேன்.

காட்சி 53

(சாரதாவும் ஹேமாவும்)

சாரதா: நான் பார்த்த எல்லாப் பெண்களையும்விட அழகாய் இருக்கிறாய. உன் பேச்சு என்னைக் கவர்ந்து விட்டது அம்மா.

(சாரதாவுக்குக் கண் தெரியாததால் ஹேமாவின் கன்னத்தைத் தடவிக் கொண்டே பேசுகிறாள். சாரதாவுக்குக் கண் தெரியாது என்ற விஷயம் தெரியாது, எனவே ஹேமா கீழ்க்கண்டவாறு கேட்கிறாள்)

ஹேமா: என்னை நல்லா பார்க்கணும்னு இப்படியா பார்க்கிறது?

சாரதா: உனக்குத் தெரியாது அம்மா. எனக்குக் கண் தெரியாது.

ஹேமா: உங்களுக்கு இரண்டு கண்ணுமே தெரியாமல் போய்விட்டதா? அத்தை எனக்குச் சொல்லவே இல்லையே. அதனுல்தான் இப்படிப் பார்க்கிறீங்களா?

(சாரதாவும் ஹேமாவும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீதர் அங்கு வருகிருன்)

ஸ்ரீதர்: சாரதா! எவ்வளவு நேரம் ஆகிவிட்டது? ஹேமாவைப் போய்ச் சாப்பிடச் சொல்!

சாரதா: ஆமா! வா அம்மா!

காட்சி 54

(ஸ்ரீதர் தன் கழுத்திலேயே ஸ்டெதஸ்கோப்பை தேடிக்கொண்டிருக்கிருன் கோபத்துடன். இதைப் பரிகாசம் செய்கிருள் ஹேமா)

ஹேமா: ஏது மாலே புதிதாக இருக்கிறது?

ஸ்ரீதர்: யார் போட்டிருக்கா? (கழுத்திலிருந்த ஸ்டெதஸ் கோப்பைக் காட்டி) இது மாலே இல்லே.

ஹேமா: இதற்குப் பெயர்?

ஸ்ரீதர்: உனக்குப் புரியாது. இதற்குப் பெயர் ஸ்டெதஸ் கோப்.

ஹேமா: தெரியும். தெரியும்.

(ஸ்ரீதரன் போகிருன்)

காட்சி 55

(அத்தையும் ஹேமாவும்)

அத்தை: ஸ்ரீதரனிடத்தில் உன்னேப்பற்றிப்பெருமையாகப் பேசியிருக்கிறேன். இன்றிரவு அவனுக்குச் சாப்பாடு உன் கையால்தான். இன்று ஊருக்குப் போகிறேன். அவனே அப்படியே கூப்பிட்டு வந்தா உன் கழுத்திலே தாலி கட்டி அழைத்துவரவேண்டியது.

ஹேமா: (கிண்டலாக) பாவம், ரொம்ப நேரமாக காக்க வைத்துவிட்டேன். அந்த மன்மதனேச் சீக்கிரமாக வரச் சொல்—ஒரு பாட்டுப் பாடி அவரைப் பயமுறுத்தணும்னு தான்.

காட்சி 56

(ஹேமாவைப்பற்றி வேலைக்காரி தங்கம்மாவும், முனிசாமியும்)

தங்க: அம்மா என்றைக்கு இந்த வீட்டுக்கு வந்தாங்களோ அன்றைக்கே அவங்க நிம்மதி எல்லாம் போயிடுத்து. புதுக் கார். அதோடு ஒரு பெண் வேறே வந்திருக்கா இல்லே. ஹேமாவாம்! பேரைப் பாரு பேரை. இப்போ நம்ப ஐயாவைக் கட்டிக்கப்போவுதாம் இல்லே.

முனி: யார் சொன்னு?

தங்: யார் சொல்லணும். அந்தச் சின்னக்குட்டி ஐயாவோடு பல்லைக் காட்டி பேசுறதெல்லாம் தெரியலே. அவ பெரிய ஆள் ஆச்சே!

முனி: பொம்பளேங்களே ரொம்ப சந்தேகப் பிராணிங்க தான்.

தங்: நீங்க எல்லாம் சந்தேகமில்லாத சத்புத்திரன் தான். உனக்கு எல்லாம் விளையாட்டுத்தான்.

முனி: பேசிக்கொண்டு போறதைப் பார்த்தா நிஜம் என்று சொல்லு.

தங்: ஆமா! அதைத்தானே இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுறுங்கோ.

முனி: இந்த அத்தை சும்மாவே இருக்கமாட்டாங்க போல இருக்குதே?

காட்சி 57

(ஸ்ரீதரன் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது)

ஸ்ரீதர்: நீ விஷயம் தெரிந்துதான் மாலே எல்லாம் கொண்டு வருகிறுயோ என்று பார்த்தேன்.

ஹேமா: என்ன விஷயம்?

ஸ்ரீதர்: பிறந்த நாள் தெரியாதா?

ஹேமா: இவ்வளவு வயசாகியும் பிறந்த நாள் கொண்டாடு வாங்களா?

ஸ்ரீதர்: எனக்கு என்ன வயதிருக்கும்?

ஹேமா: சுமார் 55, 56 இருக்கும்.

ஸ்ரீதர்: சரிதான்போ! என் ஆயுள்ளே 20, 22 வயசைக் குளோஸ் செய்துட்டியே?

ஹேமா: உங்க தாடி மீசையைப் பார்த்து அவ்வளவு வயதிருக்கும் என்று மதிப்புப் போட்டேன்.

காட்சி 58

(ஸ்ரீதர் தாடி மீசையை எடுத்து விடுகிறான்)

ஸ்ரீதர்: என்ன சாரதா?

சாரதா: அண்ணாவிடமிருந்து நாலு லெட்டர் வந்தும் நீங்கள் பதில் போடவில்லையே? இன்றாவது பதில் போடுங்களேன்?

ஸ்ரீதர்: ஆமா! ஆமா! எனக்கு ஒய்வு இல்லை.

சாரதா: ஏன் இப்படிப் பேசுறீங்கோ? உடம்பை ஜாக்கிரதையா வச்சுக்குங்கோ. தாடியை ஏன் எடுத்துட்டீங்க?

ஸ்ரீதர்: ஒன்றுமில்லே, சாரதா! வைத்தியம் செய்யப்போன இடத்திலே குழந்தைங்க தாடியைப் பார்த்து பூச்சாண்டி பூச்சாண்டின்னு பயந்துட்டுது. அதனால்தான் எடுத்துவிட்டேன்.

காட்சி 59

(சாரதா கண் தெரியாத நிலையிலும், அநுபவத்துடன் ஏதோ கடிதம் எழுதுகிறாள், தன்னுடைய அண்ணனுக்கு)

காட்சி 60

(முனிசாமியும் தங்கம்மாவும்)

தங்: யார் சொன்னாங்களோ. ஐயா தாடி எல்லாம் எடுத்துட்டாங்களே? இப்படிச் செய்திருப்பார் என்று தெரிந்திருந்தா ஒரு போட்டோவாவது எடுத்திருக்கலாமே? அப்போ எவ்வளவு அழகா இருந்தது. இப்போ பார்த்தா சகிக்கல்லே.

காட்சி 61

(தங்கை சாரதாவிடமிருந்து வந்த கடிதத்தைப் படிக் கிறான் சங்கர்)

அண்ணா! உனக்கு மறுபடியும் கடிதம் எழுத உட் காரும்பொழுது எனக்குச் சந்தோஷத்தால் தொண்டை அடைத்துக்கொள்கிறது. இவ்வளவு நாள், கடிதம் எழுத முடியாது என்ற மனப்பான்மையில் பேசாமல் இருந்து விட்டேன். ஆனால் கண் இல்லாமலேயே பல வேலைகளைச் செய்ய முடியும் என்ற ஆனந்தம் எனக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அண்ணா! இன்பம் நிறைந்தது இந்த உலகம்! மண்ணிலே புழுவாகப் பிறப்ப தற்குக்கூட புண்ணியம் செய்திருக்கவேண்டும். எப் பொழுது கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாய்? அல் லது என்னுடைய அண்ணி இன்னும் பிறக்கவே இல் லையா? உன்னுடைய சௌகர்யத்துக்குப்பதில்போடு. நான் எங்கே படிக்கப் போகிறேன். —சாரதா

சங்: (கடிதத்தைப் படித்துவிட்ட சங்கர் தனக்குள்ளேயே) அவளுக்கு இந்த ஒரு வரி எழுத எவ்வளவு தைரியம் வேண்டும்? ஆமாம்! இருட்டிலே குழந்தை கிறுக்குற மாதிரி கிறுக்கியிருக்கிறாள். அவளைப் போய்ப் பார்த்தாலொழிய எனக்குத் திருப்தி ஏற்படாது.

காட்சி 62

(சாரதா பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கிறாள். ஹேமா அப்பொழுது அங்கு வந்து)

ஹேமா: அக்கா! நானும் பிரார்த்தனையில் கலந்துகொள்ள லாமா?

சா: தாராளமாக.

ஹேமா: பாடலாமோ?

சா: ஆனந்தமாக.

ஹே: ஆனால் உங்கள் மாதிரி பக்தியாகப் பாடத் தெரி யாது.

சா: நீ எப்படிப் பாடினலும் பகவானுக்குத் திருப்திதான. பாடு அம்மா.

(பாட்டு: "காதலாகி")

(பாட்டு முடிந்ததும் ஹேமா)

ஹே: இவ்வளவுதான் அக்கா பாட்டு.

(அப்பொழுதுதான் பாட்டை நன்கு ரசித்து அங்கு வந்த ஸ்ரீதர்)

ஸ்ரீதர்: பாட்டு ரொம்பப் பிரமாதம்.

அத்தை: என்ன தம்பி?

ஸ்ரீதர்: ஹேமா பாட்டு.

அத்தை: ஓஹோ!

காட்சி 63

(ஸ்ரீதரும், அத்தையும்)

அத்தை: ஹேமாவுக்கு விஷயம் தெரியாது. அவ அப்பன் கிட்டே மாத்திரம் சொல்லியிருக்கேன். அவன் ஒரு அப்பாவி!

ஸ்ரீதர்: நாச வேலைக்குச் சதி செய்கிறீர்கள் அல்லவா? அவள் இஷ்டம்...?

அத்தை: அவ ஒரு குழந்தை. உனக்கென்ன தெரியும் வயது வந்த குழந்தைகளைப் பற்றி? நானும் ஒரு காலத்தில்......

(ஹேமா விர்ரென்று நேராக வருகிருள். ஸ்ரீதரனும் அத்தையும் பேசிக்கொண்டிருப்பதை ப்பார்த்து)

ஹே: சாரி! நீங்க இருக்கிறதைக் கவனிக்கவில்லை.

ஸ்ரீதர்: ஓ! ஐ ஆம் சாரி!

ஹே: அவசரமா எங்கே போறீங்க?

(ஹேமா லேசாகச் சிரிக்கிருள்)

ஸ்ரீதர்: நீயாகச் சிரித்துக்கொண்டால் அதற்குக் காரணம் என்ன?

ஹே: எப்பொழுதும் நீங்க வருத்தமா இருந்தால் தான் நன்ருக இருக்கிறது. அப்படியே இருங்கோ.

ஸ்ரீதர்: கவர்ச்சியான முகம். பிரம்மாவின் படைப்பே படைப்பு.

காட்சி 64

முனிசாமி: எசமான்! அம்மா கண் போனதைப் பற்றியே தெருவிலே குழாயடியிலே பேசிக்கொண்டிருந்தாங்கோ. அதோடு அவுங்க சிரிச்சிக்கிட்டிருந்தாங்கோ. நீங்க மனசு வச்சா எசமான்......அந்தப் பெண்ணு சிரிக்குதேன்னு மோசம் போயிடாதீங்க. அப்புறம் ஊரே உங்களைப் பார்த்துச் சிரிக்கும்.

ஸ்ரீதர்: சும்மாவா சொன்னுங்க! நடுத்தெருவிலே போற நாயைக் குளிப்பாட்டி வீட்டிலே வச்சா?

முனி: ஆமாம் எசமான்!

ஸ்ரீதர்: டேய்! வேலையைக் கவனி.

முனி: நான் வேலையை ராஜிணுமா செய்து ஒரு செகண்டுக்கு மேலே ஆச்சு.

ஸ்ரீதர்: இவன் போனு இன்னெருவன். போடா.

காட்சி 65

(சங்கர் ஸ்ரீதர் வீட்டுக்கு வருகிருன். ஸ்ரீதர் வீட்டில் இல்லை. ஹேமா இருக்கிருள். ஆனுல் ஹேமாவுக்கு சங்கர் யார் என்பது தெரியாது.)

ஹே: யார் டாக்டரா? உட்காருங்கோ. வரச்சொல்றேன்.

சங்: என்ன இது? என்னை உட்காரச் சொல்கிறீர்கள்?

ஹே: ஏன்? மருந்து போட்டுக்கொள்ளத்தானே வந்திருக்கிறீர்கள்? நீங்கள் வைத்தியத்துக்கு வரவில்லையா?

சங்: நான் டாக்டர் மச்சான்.

ஹே: நல்ல வேடிக்கை!

(ஸ்ரீதர் வருகிருன்)

ஸ்ரீதர்: சங்கரா? வா!

ஹே: நான் போய் அக்கா இடத்திலே சொல்றேன்.

சங்: இந்த நேரத்தில் நீ ஆஸ்பத்திரியில் இருப்பாய் என்று நினைத்தேன்.

ஸ்ரீதர்: வீட்டில் நிம்மதியாய் இருப்பது பிடிக்கவில்லையா?

சங்: ஒஹோ! நான் வந்த வேளை நல்லா இல்லேபோல இருக்குது.

ஸ்ரீதர்: இவன் எங்கே வந்தான் இப்போ?

காட்சி 66

(சங்கர் சாரதாவைப் பார்க்கப் போகின்ருன்)

சங்: சாரதா! சாரதா!

(இடையில் தங்கம்மாவைப் பார்க்கிருன்)

சங்: என்ன தங்கம்மா? சௌக்கியமா? முனிசாமி எங்கே காணும்?

தங்: அவர் இல்லேங்கோ. அவர் வேலையை விட்டு நின்னுட்டார்.

சங்: ஏன்?

தங்: ஐயா முன்னே மாதிரி இல்லேங்கோ. யாரிடமும் சந்தோஷமா பேசுறதில்லே. எதற்கெடுத்தாலும் கோபப்படுகிருர். அந்தப் பெண் இருக்குதே அது அடடா!

சங்: உன்னைப் பார்த்து ரொம்ப நாள் ஆச்சு. ஊர் வம்பு வழக்கெல்லாம் உன்மேல் தான்.

காட்சி 67

(தங்கம்மாவும் சாரதாவும்)

தங்: அம்மா! உங்க அண்ணு வந்திருக்கிருர் போல இருக்கிறதே.

தங்: அண்ணு வருகிருர். நான் போகிறேன்.

காட்சி 68

(சங்கரும் சாரதாவும்)

சங்: இப்பத்தான் விஷயம் தெரியுது. ஏன் இவ்வளவு நாள் ஸ்ரீதரன் லெட்டர் போடலேன்னு. ஸ்ரீதரன் உன்னை க்கவனிக்கிருனு? நீ செளகரியமா இருக்கியா?

சா: அண்ணு! நீ செளகர்யமா இருக்கியா?

சங்: ஓ! விஷயம் ரொம்ப தூரத்துக்கு முத்திப்போயிட்டுது போல இருக்குது. இன்னும் குழந்தை மாதிரி விளையாடுறே? ஏன் சாரதா! இவ்வளவு கஷ்டப்பட்டும் இன்னும் என்னிடம் குழந்தையைப்போல விளையாடுறியே? (இச்சமயத்தில் ஸ்ரீதரன் வருகிருன்) ஸ்ரீதரனு? ஹேமா தோட்டத்தில் காத்துக்கொண்டிருக்கா!

ஸ்ரீதர்: ஹேமாவைப்பற்றி நீ பார்த்தமாதிரி சொல்கிருயே. வந்ததும் வராததுமா இப்படிப் பேசுறியே? மனிதனுக்கு நிம்மதி வேணும்னு அண்ணன் தம்பி இல்லாத அனுதைப் பெண்ணு கல்யாணம் செய்து கொள்ளணும். ஏன் இப்படி மறைத்துச் சொல்கிருய்? (இச்சமயம் சங்கர் சென்றுவிடுகிருன்) (சாரதாவிடம்) வெளிப்படையாகச் சொல்கிறேன். உன் அண்ணன் இங்கே வந்திருப்பது எனக்குப் பிடிக்கல்லே. நாளைக்கே அவனை வெளியில் போகச்சொல். இல்லே, அவன் போறவரைக்கும் நான் இங்கே வரல்லே, நானே போறேன்.

காட்சி 69

(சாரதா ஹேமாவைக் கூப்பிட்டு)

சா: இப்போ அண்ணுவை உடனே வரச்சொல்லு.

காட்சி 70

(ஹேமா சங்கரிடம்)

ஹேமா: அக்கா உங்களை உடனே வரச்சொன்னுங்க.

சங்: என்னுடே அக்காவா?

ஹேமா: என்னோட அக்கா. உங்களோட தங்கை. சீக்கிரமா வாங்களேன். என்னமோ ரொம்ப பதறிப்போயிருக்காங்க. எனக்குக் காரணமே தெரியல்லே.

சங்: காரணம் எனக்குத் தெரியும்.

ஹேமா: உங்களே அவசரமா கூப்பிட்டுருங்கோ. என்ன இப்போ, என்ன தேடறீங்க? இதோ உங்கள் முன்னுலேயே இருக்குது. (கண்ணுடி சீப்பை எடுத்துக் கொடுக்கிருள்) சீக்கிரமா போங்கோ.

(வழியில் தங்கம்மாவை சந்திக்கிருன்)

சங்: தங்கம்மா! சாரதா ரொம்ப பதறிப் போயிருக்காளாம் இல்லே.

தங்கம்மா: பாவம்! அம்மாவுக்கு இருக்கிற நிலேமையிலே நீங்கதான் ஏதாவது ஆறுதல் சொல்லணும்.

சங்: ஆறுதலா! நான் திருட்டுத்தனமா மருந்து வாங்கிக் கொடுக்காமல் இருந்தால் இவ்வளவு முட்டாள்தனம் இருக்குமா!

தங்: இல்லேங்கோ. நீங்க வாங்கிக்கொடுத்த மருந்தை அம்மா உபயோகிக்கவே இல்லேயே. அது தான் கீழே விழுந்து உடைஞ்சுபோயிடுச்சே.

சங்: அப்போ சாரதா என்னிடம் சொன்னது?

தங்: நீங்களும் ஐயாவும் சண்டை போடக்கூடாதுன்னு பொய் சொன்னுங்க.

சங்: சாரதா என்னிடத்தில் பொய் சொன்னுள்! ஆகா! புருஷன் மேல் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிருள். ஆனல் ஸ்ரீதரனு அப்பப்பா!

காட்சி 71

(ஸ்ரீதரனும் ஹேமாவும்)

சா: அது தான் தங்கம்மா எனக்கு கவலையாயிருக்குது.

தங்: அதுக்கு நீங்க ஏனம்மா கவலைப்பட வேண்டும்?

சா: மறுபடியும் அண்ணாவுக்கும், ஐயாவுக்கும் சண்டை வருமோ என்று பயமாக இருக்குது.

ஹே: அண்ணாவுக்கும், தங்கைக்கும் எவ்வளவு வித்தியாசம்? தங்கைக்கு இருக்கிற பொறுமை என்ன? புத்தி என்ன? அதற்கு நேர் எதிர் அண்ணா.

ஸ்ரீதர்: உன் எஸ்டிமேட் ரொம்ப கரெக்ட்.

காட்சி 72

(சங்கரும் சாரதாவும்)

சா: அண்ணா! நீங்கள் இப்பொழுதே இந்த வீட்டை விட்டுப் போய்விட வேண்டும்.

சங்: தயவு செய்து ஏன் என்று சொல் சாரதா.

சா: என்னைக் காரணம் கேட்டுத் தொந்தரவு செய்யாதே அண்ணா! எனக்குச் சொல்லத் தெரியாது. நீ இன்றைக்கே போய்விட வேண்டும்.

சங்: யார் சொல்றது?

சா: நான் தான் சொல்கிறேன்.

சங்: அவ்வளவு தானே! அவமானம் செய்ய வேண்டும் என்பது உங்கள் அபிப்பிராயமா?

சா: அண்ணா! உன்னைப் போ என்று சொல்ல நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்?

சங்: உன்னைத் தனியாக விட்டுப் போக நான் வரவில்லை.

சா: நான் என்றைக்கும் தனியாக இருக்கவில்லை. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சகித்துக் கொள்ள தெய்வம் எனக்குத் துணை இருக்கிறது.

சங்: உன் பக்கம் மட்டும் தெய்வம் இருக்கிறது என்று அகங்காரம் கொள்ளாதே சாரதா. இப்பொழுது மறு

படியும் நீ என்ன சொல்லியும் பிரயோஜனமில்லை சாரதா! நான் தீர்மானத்துக்கு வந்துவிட்டேன். உன் பாஷையில் சொல்கிறேன். இங்கே எனக்கு ரொம்ப நாள் வேலை இருக்கிறது.

சா: நீ இங்கிருந்து போகும் வரை நான் பச்சை ஜலம் கூட சாப்பிடமாட்டேன். அண்ணா! நான் உன்னோடு எவ்வளவு வேண்டுமானாலும் சண்டை போட்டுக் கொள்ளலாம். ஆனால் மற்றொருவர் நம்மை இழிவு படுத்த இடங் கொடுக்கக்கூடாது.

சங்: இதற்கு வேறு விமோசனமே இல்லையா சாரதா?

சா: இல்லை அண்ணா, இல்லை. என் தலைவிதி. நீ போய்விடு அண்ணா, போய்விடு.

சங்: சரி சாரதா, சரி.

சா: அண்ணா! அண்ணா! என்னைக் கோபித்துக் கொள்ளாதே, அண்ணா கோபித்துக் கொள்ளாதே! (வணங்குகின்றாள்)

சங்: எழுந்திரு சாரதா! எழுந்திரு. நாம் இருவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். சாரதா! உனக்கு நம் அம்மாவை நினைவு இருக்கிறதா? எவ்வளவு அன்புடன் நம்மை வளர்த்தாள். நாம் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதற்காக எவ்வளவு பாடுபட்டாள். இப்பொழுது நாம் தவிப்பதைப் பார்த்தால் அவள் நெஞ்சம் சுக்கு நூறாகிவிடும். நல்லவேளை அவள் இல்லை. கடவுள் கருணை உள்ள கடவுள் தான்.

(கோபத்துடன் வெளியேறிய சங்கர் வெளியில் வைத்துச் சென்ற ஹோல்டாலைத் தேடுகின்றான். கிடைக்கவில்லை. ஹேமா என்ன தேடுகின்றீர்களென்று கேட்டும் பதில் கூறாமல் தேடுகின்றான் பின்பு ஹேமா ஹோல்டாலை எடுத்துத் தருகின்றாள். இந்நிலையில் ஒரு ஆள் டாக்டர் இருக்கின்றாரா என்று சங்கரிடம் கேட்கிறான்)

ஒரு: டாக்டர் ஐயா இருக்குறாங்களா?

சங்: டாக்டரும் இல்லே, ஒருத்தரும் இல்லை. போ, அப்பா.

ஒரு: என்னாங்க இப்படிக் கோபிச்சுக்கிறீங்க. சொல்லுங்க.

அவசரம். ரெண்டு நாளா வர்ரேன்னு சொல்லிட்டு வரல்லே.

சங்: ஏம்பா! டாக்டருக்குத் தான் மூளே இல்லேன்னு உனக்குமா இல்லே. வேறெ டாக்டர் இல்லையா?

(இதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஹேமா வந்து)

ஹே: நீ கொஞ்சம் வெளியிலே இருப்பா. நான் வரச்சொல்றேன் டாக்டரை.

சங்: ஏனம்மா வந்துட்டீங்க. டாக்டருக்குப்போய் உத்தரவு போர்றது தானே?

ஹே: உத்தரவு போடுவானேன்? சாதாரணமாக நான் சொன்னுலே போதும். உங்க தங்கை புருஷனைப் பற்றி ஏன் இப்படி பேசுறீங்க?

சங்: ஏன்? எப்படிப் பேசுகிறேன்? நான் கல்யாணம் செய்துகொடுத்தபோது நல்லாத்தான் இருந்தான். இப்போ கெட்டுப்போயிட்டான்?

ஹே: ஏன் கெட்டுப்போனுர்?

சங்: உங்க சகவாசத்தினுலே தான்.

ஹே: கோபம் வந்தா இவ்வளவு தான் பேச வருது. இவ்வளவு தானே?

சங்: சட்டப்!

ஹே: சட்டப்! இந்த20ம் நூற்ருண்டில் சட்டப். ஒரு படித்த பெண்ணைப் பார்த்து சட்டப் என்று சொன்னுல் சும்மா இருப்பாளா? அதான் நானும் கேட்கிறேன்.

சங்: என்ன விளையாட்டு விளையாடுறே?

ஹே: விஷயம் என்ன? நீங்க ஏன் ஊருக்குப் போறவங்க மாதிரி மூட்டை கட்டுறீங்க. எனக்கு ஒன்றும் தெரியல்லியே?

சங்: உனக்குத் தெரியாது?

ஹே: நிச்சயமாகத் தெரியாது.

சங்: உன் மனச்சாட்சியைக் கேட்டுப்பார். அது சொல்லும்.

ஹே: என் மனச்சாட்சி ஒன்றுமே சொல்ல வில்லையே?

சங்: மனச்சாட்சிகூட உன் அழகிலே மயங்கிவிட்டது போலிருக்கிறது.

(ஹேமாவும் சாரதாவும்)

ஹே: நானும் ஊருக்குப் போறேன்.

சா: என்ன ஹேமா? என்மேல் ஏதாவது தப்பு இருந்தால் அதை என்னிடம் சொல்லவேண்டும்.

ஹே: நான் உங்களைச் சொல்லவில்லை அக்கா. உங்கள் அண்ணாவைச் சொன்னேன்.

சங்: அண்ணா உன்னை என்னதான் சொன்னார்?

ஹே: அவர் ஒன்றும் சொல்லவில்லை அக்கா. நான்தான் சிறுபிள்ளைத்தனமா உளறி - அதற்கு அர்த்தம் கேட்டுக் கொண்டிருந்தால்...

சா: ஹேமா! நீ பக்கத்தில் உள்ளவரையில் நான் குருடி என்பதையே மறந்திருந்தேன். என்னைத் தனியாக விட்டுப்போனால் சீக்கிரம் வந்துவிடுவாயா?

ஹே: என்னை மறந்துவிடமாட்டீர்களே?

சா: குருடர்களுக்கே ஞாபக சக்தி அதிகம் உண்டு.

காட்சி 73

(அத்தை—ஸ்ரீதர்)

அத்: கவலைப்படாதே ஸ்ரீதர். அவருக்கு நல்லவிதமாகச் சொல்லி மறுபடியும் நானே அழைத்துக்கொண்டு வருகிறேன்.

ஸ்ரீதர்: (ஹேமாவிடம்) ஹேமா! நீ ஊருக்குப் போகப் போகிறாயா? போனால் எப்போது வருவாய்? சீக்கிரம் திரும்பி வர மாட்டே? (ஹேமா பதில் சொல்லாமல் எல்லாவற்றிற்கும் தலையாட்டுகிறாள்) ஏன்? தலையாட்டிப் பொம்மையா? பேசத் தெரியாதா? ஏதாவது பேசேன். மாட்டே?...(கோபத்துடன்) மாட்டே?

ஹே: உங்களுக்குக் கோபம் வந்ததை இன்றைக்குத்தான் நான் பார்த்தேன்.

ஸ்ரீதர்: பயந்துவிட்டாயா? இப்பொழுது பயமில்லையே?

ஹே: இல்லை.

ஸ்ரீதர்: நீ போனதும் இந்த வீடு களை இல்லாமல் போய் விடும்.

ஹே: ஆ! போதும், போதும்!

அத்: (ஹேமா போன பிறகு) சாரதாவுக்கு நல்ல மனசு. நீ ரெண்டாங் கல்யாணம் செய்துகொள்ளலாமா? வேண்டாமா? என்று சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தியே. அவ ஹேமாவுக்கு இந்த மோதிரம் கொடுத்திருக்கா. அதை நீ கொடுத்ததாக நான் அவளுக்குக் கொடுத்துவிடப்போகிறேன். நான் அவளை அழைச்சிக்கிட்டுப் போனாலும் உடனே நீ ஒரு நல்ல நாளாப் பார்த்து வந்து அவ கழுத்திலே தாலியைக் கட்டி கையோடு அழைத்துக்கொண்டு வரலாம்.

காட்சி 74

(வக்கீல் நண்பர்கள் வீட்டுக்கு முனிசாமி வருகிறான்.)

முனி: சங்கர் ஐயா இங்கே இல்லீங்களா?

ஒரு: ஸ்ரீதரனைப் பார்க்கத்தானே போயிருக்கிறார்.

முனி: அங்கேதான் போயிருக்காங்களா? எல்லாம் நல்ல நேரம்தான்.

(அத்தையும், ஹேமாவின் தகப்பனும்)

அத்: இந்த விஷயத்தில் உங்களுக்கு அதிகச் செலவே கிடையாது. லெட்டர்கூட வந்திருக்குது. எப்படியும் இந்த வாரத்துக்குள்ளே கல்யாணம் முடித்துக் கொள்ளவேண்டும்.

ஹே. தகப்: ஹேமாவுக்குக் கல்யாணம் ஆகிறவரையிலே உனக்குத் தூக்கம் வராது போல இருக்குதே? யார் யாருக்கு எப்படியிருக்குதோ?

அத்: இரண்டாந் தாரமா இருந்தாலும்கூட நல்ல இடம்! தயங்க வேண்டாம்.

ஹே: தகப்: பார்ப்போம்.

அத்: யார் பெண்ணுக்கோ கல்யாணம் மாதிரில்ல அசட்டையா இருக்கே. நல்ல ஆம்புளேங்கப்பா.

காட்சி 75

ஸ்ரீதர்: தங்கம்மா! நான் அவசரமா வெளியூருக்குப் போகிறேன். திரும்பிவர நாளாகும். அம்மாகிட்டே சொல்லிடு. அதுவரையிலும் நீ துணையாக இரு.

(இதைக் கேட்ட சாரதா)

சா: எனக்குத் துணையா? வாழ்க்கைத் துணையாக இருந்து நீங்களே உதாசீனப்படுத்திவிட்டபிறகு யாரும் துணை வேண்டாம். என்னிடம் சொல்லிப் போகாதபடி நான் அவ்வளவு துர்பாக்கியசாலியாக இருக்கிறேனா?

ஸ்ரீதர்: அப்படி ஒன்றுமில்லை. உன்னிடம் சொன்னால் நீ போக வேண்டாம் என்று தடுத்துவிடுவாய் என்ற பயம்.

சா: குற்றமுடைய நெஞ்சு அல்லவா? பயம் இருக்கத்தான் செய்யும்.

ஸ்ரீதர்: யார் மீதும் குற்றம் இல்லை.

சா: சில நாட்களாக உங்கள் செயலில் ஏற்பட்ட மாறுட்டம், பார்வையில் ஏற்பட்ட தடுமாற்றம், இவைகளை எல்லாம் நேரில் பேசாமல்விட்டது என் குற்றம்தான்.

ஸ்ரீதர்: இங்கே எதற்கு வந்தே நீ. போ உள்ளே. என்ன சாரதா என்ன என்னமோ உளறுகிறுய்?

சா: என் வேதனை உங்களுக்கு உளறலாக இருக்கிறது. இப்பொழுது நீங்கள் எதற்காக வெளியே போகிறீர்கள்?

ஸ்ரீதர்: ஒரு நோயாளியை ஸ்பெஷலா கவனிக்க.

சா: அதற்காகத்தான் ஒரு வாரமாகக் கடிதப் போக்குவரத்து நடந்ததா? உங்கள்நோயாளியின் ஊர், பேர்?

ஸ்ரீதர்: சட்டென்று நினைவுக்கு வரவில்லை. அந்த ஊர் பேர் கூட விசித்திரமாக இருக்கிறது.

சா: அதைவிட விசித்திரமாக இருக்கிறது உங்கள் பேச்சு. காரணத்தை நான் சொல்லட்டுமா? நீங்கள் இன்னுமொரு கல்யாணத்தைச் செய்துகொள்ளப் போகிறீர்கள்.

ஸ்ரீதர்: என்ன சொல்கிறுய் சாரதா?

சா: ஒருகுருடியை ஏமாற்ற இவ்வளவுபெரிய நாடகம் அவசியமா? ஆம் என்று உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள்.

ஸ்ரீதர்: ஆம் என்று சொல்கின்றேன், இப்போது நீ என்ன செய்யப்போகிருய்?

சா: நீங்கள் ஆண்டவன் முன் ஆணையிட்டதை மறந்து விட்டீர்களா? எதற்கு உங்களுக்கு இன்னுமொரு மனைவி?

ஸ்ரீதர்: இஷ்டப்படி தொடவும், கொஞ்சி விளையாடவும், சாதாரணமான பெண் தேவை?

சா: அப்போ நான் யார்?

ஸ்ரீதர்: ஒரு தெய்வத்திடம் கொண்டுள்ள பயபக்திதான் உன்னிடம் இருக்கிறது.

சா: தெய்வத்தின் பெயரைச் சொல்லி ஏமாற்ற வேண்டாம். இதோ உங்கள் பூரண சுதந்திரம் கொடுத்துள்ள உங்கள் மனைவி. உங்கள் இஷ்டம்போல் தொடுங்கள். அடியுங்கள். ஆனல் சபதத்தை மட்டும் பொய்யாக்கி விடாதீர்கள்.

(பாட்டு)

(ஸ்ரீதர் காரில் ஹேமாவின் வீட்டுக்குப் போகும் பொழுது காரில் ஒரு பெண் அடிபட்டு விடுகிருள்)

ஸ்ரீதர்: கார் அடிபட்டு விட்டதா? ஏனம்மா பார்த்து வரக் கூடாது?

அ. பெண்: உங்கள் மேல் தப்பு இல்லே. நான் தான் குறுக்கே வந்துட்டேன்.

ஸ்ரீதர்: ரொம்ப அடிபட்டு விட்டதா? வாங்கோ ஆஸ்பத்திரிக்கு.

அ. பெண்: வேண்டாம்.

(அதற்குள் அந்தப் பெண்ணின் கணவன்)

கண: சொர்ணம்! தாகத்திற்குத் தண்ணீர் கேட்டேன். அங்கே என்ன பேசிக் கொண்டிருக்கே?

அ. பெண்: இதோ வந்து விட்டேனுங்கோ.

ஸ்ரீதர்: நான் கொண்டுபோய்க் கொடுக்கிறேன் அம்மா. (ஸ்ரீதர் அப்பெண்ணின் கணவரிடம் தண்ணீரைக் கொடுக்கிருன்) ஐயா இந்தாங்க தண்ணீர்.

கண: நீங்கள் யார்? என் சொர்ணம் எங்கே? சொர்ணம்!

ஸ்ரீதர். ஐயா! சொர்ணம் உங்க பெண்ஜாதியா?

கண: பெண்ஜாதி மாத்திரமல்ல. அவள் என் கண்கள்.

(அதற்கு மனைவி வந்து)

மனை: யாரோ பெரிய மனிதரிடத்தில் போய் இதை எல்லாம் உளர்ரீங்களே?

கண: நீ இருக்கிறதினலேதானே என் கண்களை இழந்தும் கண் இப்படியா ஆயிடுத்து?

மனை: என் மஞ்ச குங்குமத்திலே ஒரு குறையும் இல்லே. என் தாலி செய்த பாக்கியம்.

ஸ்ரீதர்: ஐயா! நீங்க எங்கே இருக்கிறது? வாங்க கார்லே கொண்டுபோய் விட்டுடுறேன்.

கண: சொர்ணம்! என்ன நடந்தது?

மனை: ஐயா கார்லே வேகமாக வந்துகொண்டிருந்தார் நான்தான் குறுக்கே போயிட்டேன். நல்ல வேளையாகச் சாமர்த்தியமாகக் காப்பாற்றிவிட்டார்.

ஸ்ரீதர்: ஆமாங்க. அவசரத்திலே தெரியாமே அப்படி நடந்துட்டுது. (கொஞ்சம் பணம் கொடுக்கிறுன்)

கண: வேண்டாமுங்க. பணம் வேண்டாம். அதுவரையிலும் என் பெண்ஜாதி உயிரோடு பிழைச்சது போதும்.

ஸ்ரீதர்: உங்கள் பெயர் என்ன?

கண: மாணிக்கம்.

ஸ்ரீதர்: (தனக்குள்ளே) மாணிக்கம்—சொர்ணம்.

காட்சி 76

(சாரதா கடவுள் வழிபாடு செய்துகொண்டு)

தா: என் பிரார்த்தனை எல்லாம் வீணுகப் போய்விட்டது.

(அந்தச் சமயம் ஹேமா வந்து)

ஹே: என்ன அக்கா! நீங்க என்ன என்னமோ சொல்றீங்க. உங்க ஆசிர்வாதத்தைப் பெறுவதற்காக ஓடோடி வந்தேன்.

சா: ஆமாம்! கல்யாணமா?

ஹே: தவறு செய்யவில்லை. நான் செய்துகொண்டால் மட்டும் தவரு?

சா: நீ தவறு செய்துவிட்டதாகச் சொல்லவில்லை அம்மா.

ஹே: சீக்கிரம் அக்கா. எனக்கு கழுத்து வலிக்குது.

சா: நீ சந்தோஷமாக இரு. எல்லாச் செல்வங்களையும் பெற்றுச் சுமங்கலியாக 100 வருஷம் வாழணும்.

ஹே: என்னை மட்டும் ஆசீர்வதித்தால் போதுமா? என் கணவரையும் அழைத்து வருகிறேன்.

சா: வாழ்த்துகிறேன் அம்மா, வாழ்த்துகிறேன். சுண்டிப் பாக அழைத்துக்கொண்டுவா.

ஹே: வாங்கோ வாங்கோ.

(சங்கர் வருகிருன்)

சங்: சாரதா!

சா: அண்ணு!

ஹே: இன்னுமா அவரை அண்ணு என்று கூப்பிடுகிறீர் கள்? அவர்தான் உங்கள் தங்கை ஹேமாவைக் கல் யாணம் செய்துகொண்டவர்.

சா: எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது. அண்ணு நீ என் தெய்வம். ஹேமா! ஹேமா! இது எப்படி நடந்தது?

ஹே; விளையாட்டுப் போல் நடந்தது.

சா: நீங்கள் எப்படி திடீரென்று மாப்பிள்ளை பெண்ணுக ஆய்விட்டீர்கள் என்று புதிராக இருக்கிறது.

ஹே: நீங்க சொல்றீங்களா? நான் சொல்லட்டுமா?

சங்: நான் சொல்றேன். ஆனல் குறுக்கே ஒன்னும் நீ கேட் கக் கூடாது. சரிதானே.

ஹே: சரி.

சரி: அது ஒரு சுவாராஸ்யமான கேஸ்.

ஹே: இதிலும் வக்கீல் புத்தி...

சங்; சரி! கிடையாது. கதை.

ஹே: கதை வேண்டாம். உண்மையைச் சொல்லுங்கோ.

சங்: சரி! நீ குறுகிட்டு எதையும் சொல்லக்கூடாது.

சங்: (சாரதாவிடம்) போன முறை உன்னைப் பார்க்க வந்த பொழுது முதல் முதலில் சந்தித்தது இந்த அழகான பெண்ணைத்தான். ஆனா எனக்குத்தான் இந்த மாதிரி ஆசாமிகளிடம் பேசிப் பழக்கமில்லையா? திரும்பி ஊருக்குப் போறபோது வாயில் வந்தபடி பேசினேன். அப்போதான் பார்த்தேன் அழகான பெண்ணுக்கு கோபம்வந்தால் எவ்வளவு அழகாய் இருக்கும் என்று.

ஹே: போதும்! விஷயத்தைச் சொல்லுங்கோ.

சங்: கொடுத்த உரிமையைத் துர்விநியோகம் செய்கிறாய் பெண்ணே! அப்போது ஒருவரையொருவர் நேருக்கு நேர் சந்தித்தோம். அதுவரை இல்லாத புதுஉணர்வு வந்தது. அதோடு ஊருக்குப் போனேன். அவ்வளவு தான். (கல்யாணம் நடந்தவிதம் பற்றிக் காட்டப்படு கிறது) இதுதான் பிரம்மச்சாரி, சம்சாரி ஆன கதை.

(இந்தக் கதையைக் கேட்ட சாரதா தன் கணவனை சங்கர் ஏமாற்றிவிட்டதாக வருத்தப்படுகிறாள்)

ஹே: என்ன அக்கா! சந்தோஷப்படவேண்டியநேரத்திலே இப்படி சங்கடப் படுறீங்களே.

சா: இல்லே ஹேமா, அவர் என்ன ஆனாரோ?

சங்: சரிதான். இந்தக் கல்யாணத்தைப் பக்கத்திலிருந்து முடித்து வைத்ததே ஸ்ரீதரன் தானே.

ஸ்ரீதர்: ஆமாம் சாரதா. நான் மனிதத் தன்மையை அடைந்ததற்கு இப்போதுதான்—இதுவரை கண் ணிருந்தும் குருடனாக இருந்தேன் இப்போது பார் வையில் பிரகாசம், செயலிலே தெளிவு எல்லாம் ஏற் பட்டுவிட்டது!

ஹே: ஸ்ரீதர்! ஒரு சாதாரணப் பெண்ணை ஏமாற்றுவதாக நினைத்து நீங்களே ஏமாந்துவிட்டீர்கள்.

சங்: என் தங்கை புருஷனை என் எதிரிலேயே இவ்வளவு கேவலமாகப் பேசுறியே, உனக்கு எவ்வளவு திமிர்?

(சங்கர் சற்றுநேரம் ஒன்றுமே பேசாத சிலையாக நிற்கிருன்)

ஹேமா: என்ன! ஒன்றுமே பதில் பேசாமே இருக்கிங்களே, ஏன்?

சங்: இப்போ ஆனந்த வெள்ளத்திலே அப்படியே மிதந்து கொண்டிருக்கிறேன்.

காட்சி 77

(ஆகாய விமானத்தில் சாரதாவும், ஸ்ரீதரும் அமெரிக்காவுக்குப் போகிருர்கள்.)

சங்: முனிசாமி! ஏம்பா நிற்கிறே? அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும்பொழுது சாரதா கண்களோடு திரும்பி வருவாள். வா: போகலாம்.

ரதி பதிப்பகத்தார்
அளிக்கும்

அழகு நட்சத்திரங்களின்

அந்தரங்க வாழ்க்கை

சினிமா நட்சத்திரங்களின்
அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி
சுவைபட எழுதியுள்ள இப்புத்தகத்தின்
விலை 1 ரூபாய் தான்
தனிப்பிரதிக்கு ரூ 1—2—0 M. O. செய்க.

ரதி பதிப்பகம்

மதுரை.

கண்கள்

பாட்டு 1

பொங்கி மலருதே மங்கையின் வாழ்வு
மங்களமாய் பூச்சூட்டிடுவோம்—வளர்
செங்கையிலே வளைகாப்பிடுவோம்
கங்கையும் செந்தமிழ் காவிரியும் தினம்
கலையில் வளர்ந்திடும் திங்களும் போலே (பொங்கி)

தொகையறு

தொட்டாலும் கை மணக்கும்
தூயநிற மல்லிகையும்
பட்டான ரோஜாவும்
பண்புடைய ஷெண்பகமும்
கட்டிக் கரும்பனையாள்
கண் போன்ற தாமரையும்
கர்ப்பிணிகள் நெஞ்சமதைக்
கவர்ந்திடும் செந்தாழையும்
மற்றுமுள்ள புத்தம் புது
மலர்களெல்லாம் கொணர்ந்தே.

பாட்டு

மணி வயறதனில் வளரும் அரும்பு
மணம் வீசி உலகில் வாழ
மலையவள் திருமகள் மலரடி பாடி
மங்கையின் கூந்தலில் சூட்டிடுவோம்
குலதெய்வமெல்லாம் கும்பிடுவோம்—கை
குலுங்கிடவே வளை காப்பிடுவோம்
குலவிடும் பாலனை அணைத்திடுங் கையில்
கொழுந்தியரெல்லாம் வளையிடுவோம்
ஆசைக் கனியை அணைத்திடுங் கையில்
அத்தையும் சித்தியும் வளையிடுவோம்
அன்ன மூட்டிடும் அம்மணி கையில்
அண்ணியும் மாமியும் வளையிடுவோம்

தொட்டிலாட்டிடும் கைகளிலே
துவண்டு ஆடி இசை பாடிடவே
சொர்ண மணி வளை பூட்டிடுவோம்
பெற்ற அப்பன் மனம் பெருமை கொள்ளவே
உற்ற மாமனும் உரிமை கொண்டாடவே
வாடா மலரை வளர்த்திடும் தாய்க்கு
மாமலர் சூட்டியே வளை காப்பிடுவோம்
ஆலிலை மேவும் பாலகனே நீ வந்தாளுவாய்
தினமும் வளரும் குலமும் குலக் கொடியில் தோன்றும்
மலரும் வளர்ந்திடவே இளம் (ஆ)

காலை இளங்கதிர் போல்
மகனும் வளர
கண்டு கண்டு எங்கள்
மனமும் குளிர
ஆலும் அருகு போலும் தழைத்து
ஆணும் பெண்ணும் அன்பில் இணைந்து
தினமும் வளரும் குலமும் குலக் கொடியில் தோன்றும்
மலரும் வாழ்ந்திடவே இளம்...... (ஆ)

பாட்டு 2

கூடு செல்லும் பறவைகளே கொஞ்சங் கேளுங்க
வீட்டுக்கு நாம் போகு முன்னே வேடிக்கையாகவே
ஆட்டங்கள் ஆடவாரும் ஒன்றாய்ச் சேருங்க (கூடு)

விளையாடும் பருவ காலந்தானே—அதை
வீணாக்க வேண்டாம் சொன்னேனே
வேணும் போது வாலைப் பருவம்
வேண்டினாலும் திரும்பிடாது
நிறைந்த செல்வம் தேடிய—மிகச்
சிறந்த வாழ்வை நாடியே
பறந்து செல்லுவோம் நம்மை
மறந்து இன்பமாகவே (கூடு)

பறந்து செல்லும் பறவைகளைக் கண்டு சில
பருந்துகளும் வட்டமிடுவதுண்டு அதுக்குப்
பயப்படாமல் எதிர்த்து நின்று
ஜெயிப்பது நம் தொண்டு

வேடிக்கையாய் உலக விஷய மெல்லாம்
விளக்கமாக மகிழ்வுடனே பேசி
பம்பரம் போல் ஆடிடுவோம்
இன்ப நடனம் புரிந்திடுவோம்
புதிய உலகம் தேடியே
புதிய கலைகள் நாடியே
மதியும் செயலும் நிறைந்த நல்ல
மனிதரோடு வாழ்வோம்

பாட்டு 3

கண் கண்ட தெய்வமே உனைக் கண்ட
கண்கள் புண்ணானதேனோ
கண்ணை இழந்தேன் கனவில் விழுந்தேன்
கதியில்லாக் கபோதி யானேன்
கணவன் பாதசேவை செய்யும்
கடமை மறந்தேனோ
களங்கமான கண்ணோடு உன்னைக்
கண்டே பணிந்தேனோ (கண்ணைக்)

கொடுத்த கண்ணைப் பறிக்கும் வண்ணம்
கொடுமை செய்தேனோ
தடுத்து ஆளும் தெய்வம் நீயே
மறந்தால் வாழ்வேனோ (கண்ணை)

கரையிலா இருள் கடலிலே
காலமெல்லாம் கலங்கி வாழவோ—உன்
கழலினை பிடித்தேன்
திருமுறை படித்தேன்
திருவிளக்கேற்றினேன்.

பாட்டு 4

இன்ப வீணையை மீட்டுவது அவர் மொழியே
இருவிழிகள் இருண்டதினால்
இன்றே கண்டேன் அன்பின் வழியே
விண்ணின் இருளையே விலக்கிடும் ரவிபோல
பொன் வயல் செழிக்கவே பொழிந்திடும் மழைபோல

என்னுதனின் உயிர் வாஞ்சையே
என்னெஞ்சிலே—பண்பாடுதே
இனிமையுடன் குயிலைப் போலே (இன்ப)

எண்ணங்கள் தாரகை போல்
எழில்சுடர் வீசுதே
என்நெற்றி தனில் இன்று
நிலா வந்து பேசுதே
இல்லற வாழ்வின் இன்ப நினைவெல்லாம்
என்னெஞ்சிலே பசும் தோகைபோல்
இனிமையுடன் ஆடுதே— (இன்ப)

பாட்டு 5

அன்னை கரமென—நன்மை அருளும் கிராமத் தனி எழில்
சென்றநினைவின்—ஆசைச் சித்திரம்
நெஞ்சிலே வரையாதோ
வேலும் மயிலும் போலே
விளங்கும் நெற்கதிர் பசும் வயல்
நீலமணியின் நிலை நிகர்த்த
ஏரிக்குளிர் புனல்
ஆலவிழுதில் ஊஞ்சலாடும்
சின்னஞ்சிறியவர்
ஏலவேய்ங் குலலூதி
இடையர் கூட்டும் பசுவினம்
பள்ளிவாசல் மீதே
பறந்தே சுழலும் புறாவினம்
அல்லி மலர் நிறைவாவி
அதனில் கொக்கு உலாவிடும்
பெண்கள் கற்பின் உயர்நிலம்
பேசும் இனிமைக் கவிதைகள்
கண்கள் இருள் போக்கும்
உண்மையாம்
உயிரின் தீபம் க்ராமமே

பாட்டு 6

வருங்காலத் தலைவன் நீயே பாப்பா
வளர் தமிழ் நாட்டிலே பிறந்ததினாலே (வருங்)

வறுமையைப் போக்கி வாழ்வை உண்டாக்கி
இருவிழி ஆண் பெண் சரிநிகர் என்று சொல்லும் (வரும்)

கர்வமும் கோபமும் கூடாது பாப்பா
கருணையே உனது பெருந்தனம் பாப்பா
பொய்யும் பொறாமையும் பெரும் பாவமாகும்
மெய் சொல்லும் வாழ்வே வீரம் உண்டாக்கிடும் (வரும்)

அறிவும் தெய்வம் அன்னையும் தந்தை
ஆயிரம் தந்தாலும் விற்காதே சிந்தை
தன்னலம் இல்லா சேவை தந்திடும் மேன்மை
சொன்னபடி செய்கையில் நடப்பது ஆண்மை (வரும்)

பாட்டு 7

சின்னப் பெண்ணே வாடி
கன்னிப் பெண்ணே வாடி
தண்டையே கல் கல் எனவே அன்னம்—போல்
தை தை என்று வாடி
நாவாரப் பாடிக்கொண்டே
நாட்டியம் ஆடிக்கொண்டே
பூவாடைக் காரிக் கின்று
பொங்கல் போடவேணும் என்று
பொன்னான நெல்லைக் கூட்டி—முத்துபோல்
புதுப் பச்சரிசி தீட்டி—வாடி (சின்ன)

ஆகாச வாணீ தாயே
ஆதரிக்க வேணும் தாயே
ஓங்காரியே—ரீங்காரியே
ஓங்காரியே சந்தனக் காப்பிட்டு
மஞ்சளும் குங்குமமும் சாற்றுவோம்
தகதகவென நெருப்பு மிதித்துப்
போற்றுவோம்—ரீங்காரியே

ஆண்: தாலி கட்டும் ஆண்பிள்ளையை
தள்ளியே போறே பெண்ணே
நூலாகும் ஆண் பிள்ளை கேளு
சேலைதான் பெண்பிள்ளை கேளு கேளு

பெண்: காலித்தனம் செய்து என்னைக்
கைபிடிக்கும் ஆண்பிள்ளையே
பூமாலைக்குள்ளே மறைந்திருக்கும்
வாழ நாரு ஆண் பிள்ளை— அதில்
மதிப்பான மலராவாள் பெண் பிள்ளை

ஆண்கள்: சேலை நெய்ய நூலு வேணும்

பெண்கள்: மாலை கட்ட நாரு வேணும்

இருவரும்: குடும்பம் செய்ய ஆணும் பெண்ணும் வேணும்
நீங்களும் குணமாக வாழ்ந்திட வேணும்
சின்னப் பெண்ணே வாடி
உனக்கு நல்ல ஜோடி
காத்திருக்கும் மாப்பிள்ளை
கழுத்தில் மாலை போட்டு
கண்ணோடு கண் பேசி ஆடடி

பாட்டு 8

காதலாகிக் கசிந்து கண்ணீரும் மல்கியே
கற்பூரம் மென் மலர் தன்னையும் சாற்றியே
பாடிப் பாடி தினம் தேடினாலும் அவன்
பாதம் காண முடியாது—ஈசன்
பாதம் காண முடியாது (பாடிப்)

நாடி நாடி மனம் வாடி நொந்தவர்
கோடி கோடி இந்த உலகில்
அற்புதங்கள் பல செய்திடும் சித்தர்கள்
அகத்திலும் ஆண்டவன் இல்லை
நற்பயனில்லாத நாச வேலை செய்யக்
கற்ற விஞ்ஞானத்திலும் இல்லை—என்றறியாமலும் (பாடிப்)

விற்பனர் போல் பல வேஷமிடும் கலைஞர்
வெம்பகை நெஞ்சிலும் இல்லை
கற்புள்ள மாதர்கள் காக்கும் உழவர்கள்
கருத்திலே வாழ்கிறான் கடவுள் என்றறியாமல் (பாடிப்)

பாட்டு 9

முத்துச் சிரிப்புடனே—மன
மோஹம் தரவே வா
கத்தும் குயில்களின் தமிழ்
கானம் கேட்டே வா......வா (முத்து)

அல்லி மலர் உனையே வெகு
ஆசையாய் தேடுதே
அழகாம் உன் முகம் கண்டு
அலைகடல் ஆடுதே... (முத்து)

சின்னஞ் சிறு வயதில் என் அன்னை
உன்னைக் காட்டியே
அன்னம் ஊட்டினளே—அதுபோல்
அமுதாம் கவியருள்வாய் நிலவே (முத்து)

பாட்டு 10

ஆளு கனம் ஆனால் மூளை காலி
அறிவிருந்தால் அவனியெல்லாம் ஜாலி
ஆடை அலங்காரம் பகட்டு பலே ஜோரு
அருகே சென்று கேட்டா எம்டி பாக்கட் பாரு
ஆனால் அறிவுள்ளவன் ஹீரோ
அவன் இன்பர்மேஷன் பீரோ
அவங்கிட்டத்தான்
ஆடை அலங்காரமெல்லாம் ஜீரோ
அணுகுண்டு டார்பிடோ
ஆளின்றிப் பறக்குது
ஹாலிவுட் டெலிவிஷன்
டான்ஷும் இங்கே தெரியுது
அறிவுள்ள மனிதனிடமே
உலகமே நெருங்குதே
அதிர்ஷ்டமும் விதியுமே
உனக்குத்தான் புரியுதே
இதை அன்பாய் மனதில் கொள்ளு—நீ
அரட்டை பேச்சைத் தள்ளு
அறிவே உலகை வெல்லும் என்று சொல்லு (ஆளு)

பாட்டு 11

பிஸ்மில்லா இர்ரஹிமானிர் ரஹீம்
ஸத்தியமே தவறாமலே தலைவணங்க அருள் நபிநாயகமே
யாரஸூலுல்லா மக்கள் புகழ் மஹம்மதுவே
மக்காவின் ஜோதியே
யாரஸூலுல்லா ...ஸபியல்லா — அல்லா
நான்கு திசையும் புன்னகை சிந்தி
நன்மை செய்தாய் நபிநாயகமே
காணும் பிறையைக் கையெனக் காட்டிக்
கருணை செய்தாய் நபி நாயகமே (நான்கு)

ஆசைப் புயலில் ஏழை நெஞ்சம்
அலைவதைத் தடுப்பாய் ஆண்டவனே
அழுத கண்ணீரை மாற்றி ஆனந்தம்
அருள்வாய் அன்பான ஆண்டவனே (நான்கு)

துன்பங்கள் வந்தாலும் நம்பிக்கை குறையாமல்
தொழுதிடச் செய்வாயே அல்லாவே
இன்பத்தின் எல்லை நீ எங்கும் நிறைந்தனை
ஈடேற வழி காட்டும் அல்லாவே (நான்கு)
பிஸ்மில்லா இர்ரஹிமா னிர்ரஹிம்...

சுபம்! சுபம்!! சுபம்!!

'ரதி' யின்

முத்திரை பதிந்த புதிய புத்தகங்கள்

கழக வெளியீடுகள்:-

திராவிடத்தில் தீ...	விருதை ந. இராமசாமி	விலை	4	அணா
தி. மு. க.வின் இரத்தபலி	"	"	4	"
தூக்கு மேடையிலே அண்ணா	"	"	4	"
தம்பிக்குச் சவால்	"	"	4	"
பதவி வேட்டை	மதுரைமன்னன்	"	4	"
ஏ திராவிடமே!... நீ அழு...	வசனப்பித்தன்	"	4	"
தி. மு. கவே ஜாக்கிரதை	"	"	4	"
அண்ணாவின் விடுதலைப் போர்	"	"	4	"
கருணாநிதியின் போராட்டம்	"	"	4	"
அழிவுப்பாதையிலே அண்ணா...	புரட்சித்தூதன்	"	4	"
சிக்கிவிட்டார் கருணாநிதி	"	"	4	"
ஈட்டிமுனையில் கருணாநிதி	அழகன்	"	4	"

அழகு நட்சத்திரங்களின்

அந்தரங்க வாழ்க்கை

சினிமா நட்சத்திரங்களின் அந்தரங்க வாழ்க்கையை அழகுபட கேலியும் கிண்டலுமாய் பிரபல 'கலை' ஆசிரியர் 'நவீனன்' எழுதியுள்ளார்.

விலை 1 ரூபாய் தான்

எல்லா சினிமா வசனம்—பாட்டு புத்தகங்கள் கிடைக்கும்.

தனிப்புத்தகம் வேண்டுவோர் புத்தகக் கிரயத்தை M. O. செய்யவேண்டும்.

ஏஜண்டுகள்—அவர்களின் ஏஜன்ஸி கமிஷன்—விசேஷ சலுகைகள்—விபரக் காட்லாக்கிற்கு எழுதவும்.

ரதி பதிப்பகம்,

மதுரை.